இதழ்: 65

# ஞாபகம்



சுபா

## ஆரம்பிக்கும் முன்

சந்திரபூபதி தன் ஆபீஸ் ரூமில் இருந்தார், எதிர்நாற்காலியில் மரியாதையோடு உட்கார்ந்திருந்த அக்கவுண்டண்ட் பவ்வியமாக நீட்டிய ஃபைலைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

டப் டப் என்று கதவு தட்டப்பட்டு, 'கம்இன்' என்று சொல்வதற்குள் பளீரென்று திறக்கப்பட்டு அந்த இளம்பெண் ஓடி வந்தாள்.

"ஹாய் டாடி, ஹாய் அங்கிள்" அங்கிள் அக்கவுண்டண்டைப் பார்த்து.

"சசி, திஸ் இஸ் ஆஃபீஸ்" சந்திரபூபதி போலியான கோபத்துடன் சொன்னார்.

சசிகலா துள்ளி அவருடைய பரந்த மேஜையில் ஏறி உட்கார்ந்து, முகத்தை வளைத்து அப்பாவின் நெற்றியில் ஒரு முத்தத்தைத் பதித்தாள்.

"ஆபீஸ் ரூமாயிருந்தாலும் நீங்கள் என் டாடி தானே, டாடி? நான் பிக்னிக் போகிறேன் என்றேனே, கிளம்பிக் கொண்டேயிருக்கிறேன். வரட்டுமா?"

மேஜையிலிருந்து துள்ளி இறங்கி அதே வேகத்தில் ஓடி கதவு திறந்து வெளியே காணாமல் போனாள்.

சந்திரபூபதி அவள் விட்டுப்போன வாசனையை சிரித்துக் கொண்டே, "ரொம்ப நாட்டி டைப்... ஒரு இடத்தில் உட்கார்த்தி வைக்க முடியாது. இருபத்தி நான்கு மணி நேரமும் ரவுண்ட் அடித்துக் கொண்டேயிருக்க வேண்டும் அவளுக்கு" என்றார்.

"நீங்கள் சொல்லுங்கள். பாலன்ஸ் ஷீட்டில்?" என்று மனசு இல்லாமலேயே பிஸினஸில் இறங்கினார்.



## நதிக்கரை ஞாபகம் 1

வானத்தில் ஆரஞ்சு சூரியன் பிரவேசிக்க ஆரம்பித்த நேரம். மெல்லிய பனி சுருண்டு எழுந்தது. அந்த பச்சை செல்வச் செழிப்பின் பின்னணியில் வெகு வசீகரமாக இருந்தது.

குதிரை எதிர்க்க உல்லன் ஷால்கள் சகிதம், மார்பை மூடிய ஸ்வெட்டர்களோடு, அந்த டூரிஸ்ட் குழு ஏறிக் கொண்டிருந்தது. மொத்தம் ஐம்பத்தாறு தலைகள். குடுமி, வேட்டி, சேஷகோபாலனில் ஆரம்பித்து, ஜீன்ஸ் பனியன் போட்ட சுமித்ரா வரை எல்லா ருசிகளிலும் ஆட்கள். சற்றே மேடேறும் மலைப்பாதை. மண்பாதையில் கால் நழுவாமல் இருக்க, பதிக்கப்பட்ட கற்கள். நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் சிலுசிலுத்துப் போகும் சுதந்திர ஓடைகள். காற்றில் குளிரும், ஆரோக்கியமும் அடர்ந்திருந்தது.

குழுவின் தலையில் குரங்குக் குல்லாவும், சிகப்புப் பொத்தல் விழுந்த ஸ்வெட்டருமான கைடு, கைகளை ஆட்டி, ஆட்டி விளக்கிக் கொண்டே நடந்தான். வயதானவர்கள் மேற்கொண்டு ஏற முடியாமல் ஒதுங்கி விட்டார்கள்.

"திரிகோணமலை என்று இந்த மலையை சொல்வார்கள். ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்த பிஜூ மகாராஜா எதிரிகளுக்குப் பயந்து இந்த மலையில் நான்கு ஆண்டுகள் ஒளிந்து வாழ்ந்ததாக சரித்திரம் சொல்கிறது. பிஜூ மகாராஜாவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம் (யாரும் கேள்விப் பட்டதில்லை என்று நிச்சயித்துக் கொண்டு, திருப்தியுடன்) அவர் ஒரு அற்புதமான சிற்பக் கலைஞர். கல்லில் கவிதைகள் எழுதியவர். சில அற்புதமான சிற்பங்களை இப்போது பார்க்கப் போகிறீர்கள்.. இதோ

குகை வந்து விட்டது... தயவு செய்து எல்லோரும் ஒரே குரூப்பாக, ஒருவரோடு ஒருவர் கை கோர்த்துக் கொண்டு என் பின்னே வாருங்கள். இருட்டில் பிரிந்து விடப் போகிறீர்கள்" கைடு அச்சம் காட்டினான்.

இப்போது மலையில் பசுமை அலம்பி விடப்பட்டு, அழுக்கான பிரவுன் நிறத்தில் பாறைகள் நெருக்கி நின்றன. நூற்றாண்டுகளின் மழைகள் பாசியை பெயிண்ட் அடித்திருந்தன. வெயில்கள் சிற்சில ஆச்சரிய விரிசல்களில் செடிகளாக வளர்ந்திருந்தன. பாறைகளுக்கு நடுவே, தீர்மானமில்லாத ஒரு அரை வட்டமாக அந்த வாசல்.

அபாயம் துணை இல்லாமல்,
வெளிச்சம் இல்லாமல் உள்ளே
நுழையாதீர்கள்.

கவர்மெண்ட். ஆங்கிலத்தில், தமிழில் எழுதி வைத்த போர்டு, நைந்து, எழுத்துக்கள் உரிந்திருந்தன.

கைடு கையில் இருந்த சக்திவாய்ந்த டார்ச்சை உயிர்ப்பித்தான்.

பிரகாசமான வெளிச்சம் குகைச் சுவர்களில் வீசப்பட்டுப் பிரதிபலித்தது.

'ஹா!' என்று குரலில் கொஞ்சம் டிராமா சேர்த்து கூட்டம் சிற்பங்களை ரசிக்கத் துவங்கியது.

முதல் சிற்பம் பெண். பெருத்த அவைகளும், கைப்பிடியில் அடங்கும் இடுப்பும், செழித்த தொடைகளுமாக ஒயிலாக நூற்றாண்டுகளாக சிரிப்பு மாறாமல் நின்றாள். அடுத்தது குதிரை வீரன். கால் நரம்புகள் கூட துல்லியமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. அடுத்தது ஆண்-பெண்



ஆலிங்கனம். பிஜி மகாராஜா தூக்கம் வராத இரவுகளில் வடித்திருக்க வேண்டும். காமம் சொட்டியது. கூட்டத்தில் சின்ன அவமானம் அலை பாய்ந்தது.

"நண்பர்களே, இந்த குகையில் இருபதடிக்கு மேலே இருபுறமும் பாதைகள் பிரியும். அங்கேயும் சில சிற்பங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தப்பித் தவறிக் கூட அந்தப் பக்கம் போய் விடாதீர்கள். ஆக்ஸிஜன் இல்லாத இடம். உயிரோடு திரும்புவது கஷ்டம். கைடு அச்சத்தை விசிறிவிட்டான்.

ஒருத்தரை ஒருத்தர் பிடித்துக் கொண்டிருந்த கைகள் இறுகின. பார்த்தவரை போதும் என்ற அவசரம் வந்து எல்லோரையும் தொற்றிக் கொண்டது. இரண்டு பேர்களைத் தவிர.

ஜானகிராமன், பாஸ்கர்.

இளைஞர்கள் நவீன யுகத்துத் துள்ளல்கள்.

"டேய், அந்தப் பக்கம்தான் நிறைய சிற்பங்கள் இருப்பதாக யாரோ சொன்னார்கள். கஜூராஹோ டைப். சுற்றிப் பார்த்தால் டயமாகி விடும் என்று இந்த கைடு டபாய்க்கிறான். நாம் தனியே கழன்று கொள்வோமா?"

"ஒய் நாட்? என்னிடம் பென் டார்ச் இருக்கிறது"

டூரிஸ்ட் கூட்டத்தை வழி திருப்பி இப்போது எதிர்ச்சுவர் சிற்பங்களில் டார்ச் அடித்து விளக்கிக்கொண்டே வாசல்புறம் செலுத்த கைடு முற்பட, இருவரும் சுலபமாக அவர்களிலிருந்து நழுவினார்கள்.

இருபுறமும் பிரிந்த குகைப்பாதையில் இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அதுவரை தன் டார்ச்சை ஆன் செய்யாத பாஸ்கர் ஆன் செய்தான்.

மெல்லிய வெளிச்சம் விரலை நீட்டிச் சுவரைத் தொட்டது.

கஜுராஹோதான். ஆணும் பெண்ணும், ஆண்களும் பெண்ணும், பெண்களும் ஆணும், காமத்தின் உச்ச வக்கிரங்களைத் திருபமாகக் கற்களில் செதுக்கியிருந்தான் பிஜு 'காம'ராஜா. இளமையின் அவஸ்தையும், பார்வையின் ஆர்வமுமாய் அவர்கள் பார்த்துக் கொண்டே பத்தடி கடந்திருப்பார்கள்.

திடீரென்று அந்த விபரீதம் நடந்தது. மேலேயிருந்து, சிறு கல்லோ என்னவோ பெயர்ந்து விழுந்தது. நேரே டார்ச்சின் மீது. பாஸ்கர் அடிப்படை பயத்தில் அக் என்று டார்ச்சை நழுவவிட்டான். இரண்டாகப் பிளந்து பாட்டரியும், மூடியும் டைவர்ஸ் செய்தன.

குபீர் என்று இருட்டு சூழ்ந்தது. இருட்டு என்றால், அந்த புள்ளியளவு கூட வெளிச்ச சாத்தியம் இல்லாத இருட்டு.

"பாஸ்கர்!" ஜானகிராமன் அவசரமாக கையை நீட்டி பாஸ்கரைத் தொட்டான். பாஸ்கர் பயத்தில் துள்ளி ஜானகிராமனை அணைத்தான்.

"மேட்ச் பாக்ஸ் இருக்கிறதா?" இருவரும் கைகளை இறுக்கிக் கோர்த்துக் கொண்டார்கள்.

ஜானகிராமன் சட்டைப் பை, பாண்ட் பையில் தடவி தீப்பெட்டியை எடுத்து இந்தா என்று இருட்டில் நீட்ட, பாஸ்கர் அதை தவற விட்டான். "யூ ஃபூல்!" ஜானகிராமன் இரைந்தான். "யூ ஃபூல், யூஃபூல்" என்று அத்தனை சிற்பங்களும் எதிரொலித்தன. பாஸ்கர், ஜானகிராமனின் கையை விட்டுவிடாமல் அப்படியே கீழே உட்கார்ந்து தரையில் துழாவ ஆரம்பித்தான்.

தரை ஈரமாக இருந்தது. ஷூக்களில்



தென்படாத ஈரம் இப்போது கையில் சிலீர் என்று தட்டுப்பட்டது. தீப்பெட்டி முற்றிலும் நனைந்து சொத் சொத் என்றிருந்தது.

"குரல் கொடுடா... கைடு தன் டார்ச்சோடு வரட்டும்"

கத்தினார்கள். மறுபடி மறுபடி கத்தினார்கள். குகையின் அமைப்பில் அந்த ஓசை உள்ளே உள்ளே எதிரொலித்ததே தவிர வெளியே பயணம் போகவில்லை.

"சுவரைத் தடவிக் கொண்டே போகலாம், வா"

வெளிச்சத்தில் காம உணர்ச்சியைத் தூண்டிய சிற்ப வளைவுகள் இப்போது இருட்டில் பயத்தையும், பாதுகாப்பையும் கலந்து தெரிவித்தன. தரையில் கால்களைத் தேய்த்து நான்கடி நகர்ந்தவுடன், பட் என்று நின்றுவிட்டார்கள். காரணம், எலும்புகளைத் தொட்டு உலுக்கும் அந்த ஒலி.

'ப்ஹா ப்ஹா ப்ஹா' என்று வேட்டை நாயின் மூச்சிரைப்பு போன்ற ஒலி. எங்கேயிருந்து வருகிறது? மேலேயிருந்தா, பின்னாலிருந்தா? சூடான மூச்சுக் காற்று பின்னங் கழுத்துகளில் வருடுவது போல்கூட இருந்தது.

"யார் அது?" நடுங்கும் குரலால் பாஸ்கர் அதட்டினான்.

'ப்ஹா ப்ஹா ப்ஹா' கழுத்தில் எதுவோ மெத்தென்று வருடியது. ஈஈஈ என்று அலறினான். ஜானகிராமனின் கையை உதறிவிட்டு ஓடினான். தப்பான திசையில்.

ஜானகிராமன் பயத்தின் விளிம்பில் புலன்கள் செயலற்றுப் போயிருக்க, இருதயம் தரையில் எறிந்த மீன் போல துள்ளத் துள்ள, திடீரென்று ஓட ஆரம்பித்தான். காலை எதுவோ கொக்கி போட்டுத் தடுக்க, குப்புற அடித்து முகத்தில் தண்ணீரில் விழுந்தான்.

மெத்தென்று ஏதோ பொத்துப்பட, பிராண வாயுவோடு சேர்ந்து அந்த வாசனையையும் அவன் பலூன் பலூனாக உறிஞ்சினான். புலன்கள் மரத்தன.

பாஸ்கர் திரும்பக் கூடாத இடத்தில் திரும்ப முயற்சி செய்து பாறையில் நெற்றி மோதி கீழே விழுந்தான். முகத்தில் ஏதோ பொத்துப்பட, அவன் புலன்களும் மரத்தன.

உள்ளே நடந்த விபரீதம் பற்றித் தெரியாமல், டூரிஸ்ட் குழு, பஸ் வரை சென்று தலைகளை எண்ணி, இரண்டு குறைவதைக் கணக்கிட்டு, காத்திருந்து, ஆள் வராமல், கைடும், இன்னும் சில தைரியர்களும் குகைக்குள் புகுந்து தேடிய போது, பாஸ்கரும் ஞானகிராமனும் கண்ணுக்கெட்டிய எந்தத் திசையிலும் இல்லை.

## நதிக்கரை ஞாபகம் 2

சூரியன் சாய் கோணத்திலிருந்து நேர்கோணத்திற்கு நிமிர்ந்துவிட்ட பகல் பொழுது.

பாஸ்கர் கண்களைத் திறந்தான்.

'உப்' என்றான் ஞானகிராமன். திடுக்கிட்டதன் காரணம் எதிரே இருந்த பாஸ்கர்.

பாஸ்கர் ஒரு மரத்தின் உடம்போடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். அந்த மரம் வினோதமாய் இருந்தது. இதுவரை ஞானகிராமன் அவன் வாழ் நாளிலேயே சந்திக்காத தினுசு.

கிட்டத்தட்ட பதினான்கு அடி உயரம். பார்லிமெண்ட் தூணைப் போன்ற அகலமான அடித்தண்டு. பிரவுன் பட்டைகளில் மெலிதான ஈரக்கசிவு. சற்றே குறுகிய நடுப்பகுதி. மீண்டும் விரிந்து போன மேல்பகுதி. மேல் பகுதியின் உச்சியிலிருந்து



கிளைகள் எட்டுத் திக்கும் ஆக்டோபஸ் கைகள் போல் நீண்டிருந்தன. முந்தின நாள் பெய்த மழையில் நனைந்திருந்தன. காற்றில் மெலிதாக அசைந்து கொண்டிருந்தன.

ஞானகிராமன் அசைய விரும்பினான்.

முடியவில்லை. கைகளிலும், மார்பின் குறுக்கிலும் தடிமனான கயிறு ஓடியிருந்தது. கயிறு இல்லை. காட்டுக் கொடிகள் சிலவற்றைச் சேர்த்து முறுக்கிற பின்னல், மரத்தின் உடம்போடு அழுத்திப் பிடித்துக் கட்டியிருந்தன.

பாஸ்கர் கட்டப்பட்டிருந்த மரத்தைப் போலல்லாமல் இந்த மரம் வேறு விதமாக இருந்தது. காற்றில் பசுமையின் வாசனையை மீறி, ஒரு வித மருந்து நெடியை மீறி துர்வாசம் ஒன்று கலந்து வந்தது.

பாஸ்கர் ஞானகிராமனைப் பார்த்தான். பார்வையில் அச்சமும், இயலாமையும் கலந்திருந்தன. சற்றுப் பார்வையை நகர்த்திய போது துர்வாசம் ஏன் வருகிறது என்பதற்கான காரணம் புரிந்தது.

மரத்தின் நிழ ் படியாத இடத்தில் குப்பை போல் குவிந்திருந்தது. சாம்பல குப்பை, அந்தக் குப்பையில் சில மணி மிச்சங்கள். ரத்தம் காய்ந்த சில எலும்புத் துண்டங்கள். யாவற்றையும் விட விபரீதமாக மனித மண்டையோடுகள்.

பாஸ்கர் அச்சத்தின் எவரெஸ்டில் அலறினான். மயங்கினான். பிடித்திருந்த கொடிப் பின்னல்களிலிருந்து தொய்ந்தான்.

சூரியன் தகித்தது. ஞானகிராமன் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டான். எங்கு திரும்பினும் செடிகள், மரங்கள், கொடிகள்.

வேப்பமரம், அரசமரம், புளியமரம், ஆலமரம்... ஞானகிராமன் காலேஜில் புத்தகத்தில் கூட படிக்காத பல்வேறு தினுச

மரங்கள்.

பூக்களில் டேலியா, குல்மோஹர், லில்லி, ஜாஸ்மின், ரோஜா, கிஸ்ஸஸ் ஆஃப் ஃபயர்... பெயர் தெரியாத நூற்றுக்கணக்கான இயற்கைத் தெளிப்புகள்.

ஜானகிராமனின் காதுகள் விறைத்தன.

சளக் சளக் என்று சேற்று மண்ணில் இரண்டு பாதங்கள் நடந்து வரும் சப்தம். ஜானகிராமன் கழுத்து வலிக்கும் மட்டும் வளைத்து திருப்பிப் பார்த்தான்.

அந்த மாபெரும் முடிவில்லாத் தோட்டத்தின் ஒரு பகுதியில் அவன் தெரிந்தான்.

மனிதன்!

முதுகைக் காட்டி நின்றிருந்தான். அவன் ஆடைக்குப் பதிலாக பழுத்து உதிர்ந்த இலைகளை அமைத்து உடலின் முக்கிய பாகங்களை மூடியிருந்தான்.

காட்டுவாசிக் கூட்டமா?

அவன் நடை தளர்ந்திருந்தது. பானை போன்ற பெரிய மண்பாண்டத்திலிருந்து செடிகளில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான். தண்ணீர், தீர்ந்ததும் திரும்பிப் பார்த்தான்.

ஜானகிராமனுக்கு அடிவயிற்றில் மத்தாப்பை செருகியது போல் இருந்தது.

அந்த தழை மனிதனின் கண்கள் சிவந்திருந்தன. தலை வாரப்படாமல் கோரமாகக் கலைந்திருந்தது. முகமெங்கும், குழந்தைகள் விளையாடிய பீச் சுரப்பைப் போல குழியும், சுருக்கமுமாய் இருந்தது. ரோமங்கள் உதிர்ந்து ஒட்டிக் கொண்டிருந்த ஒன்றிரண்டும் சீரில்லாமல் இருந்தது,

அவன் ஜானகிராமனை நோக்கி நடந்து வந்தான். பார்ப்பதற்கு ஏதோ ஒரு செடியே நடந்து வருவது போலிருந்தது.

ஜானகிராமன் சுருங்கினான்.

அந்த மனிதன் வெகு அருகில் நெருங்கி,



ஜானகிராமனின் முகவாயைப் பற்றி நிமிர்த்தினான். வாய் திறந்து சிரித்தான்.

"யா... யார் நீ"என்றான் ஜானகிராமன் தன்னைப் பிணைத்த கொடிகளில் திமிறினான். அந்த மனிதன் சற்று தள்ளி ஒரு பாறையில் குத்துக்காலிட்டு அமர்ந்தான்.

"யார் நான்? இயற்கையின் நண்பன்..." மறுபடியும் சிரிப்பு.

"எங்களை விட்டு விடு... ப்ளீஸ் எங்களை விட்டு விடு"

அந்த மனிதன் கீழே உதிர்ந்து கிடந்த ஒரு நெல்லிக்காயை எடுத்துக் கைகளில் உருட்டினான். தன் பற்களில் வைத்துக் கடித்தான்.

"என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றான். கொட்டையைத் துப்பிவிட்டு, "பைத்தியம் என்றா?"

"இல்லை, நீ நல்லவன்... ஏதோ கோபத்தில் எங்களைப் பிடித்து வந்து விட்டாய். பார்க்கக் கூடாத சிற்பங்களை நாங்கள் பார்த்ததால் இருக்கலாம். சத்தியமாக இனி அந்தத் தவறைச் செய்ய மாட்டோம். ப்ளீஸ் விட்டு விடு" ஜானகிராமன் தன் இருபத்து நான்கு வயதை, தன் டிகிரி படிப்பை, நாகரீக குடும்பத்தை, இளமைத் துணிச்சலை எல்லாவற்றையும் மீறி பயத்தில் அழுதான்.

பாஸ்கர் கண் விழித்தான். அந்த தழை மனிதனையும், ஜானகிராமனையும் பார்த்ததும் உடம்பில் மறுபடி நடுக்கம் ஓடியது.

"நீங்கள் இரண்டு பேரும் காலேஜ் ஸ்டூடண்ட்ஸா?"

பாஸ்கர் திடுக்கிட்டுப் பார்த்தான். ஜானகிராமன் ஆச்சரியமாகப் பார்த்தான். அந்த காட்டுவாசி மனிதனின் வாக்கியத்தில் ஆங்கிலம்!

"நீ.. நீ படித்தவனா?" பாஸ்கர் நடுங்கும் குரலில் கேட்டான்.

"டாக்டர். இயற்கை மருத்துவம் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? கேள்விப் பட்டிருந்தால் இந்த மைக்கியைப் பற்றி நிச்சயம் கேள்விப்பட்டிருப்பாய்"

"எதற்காக எங்களைக் கட்டிப் போட்டிருக்கிறாய்?"

"நீங்கள் தப்பித்துப் போகாமல் இருக்க"

"உன் நோக்கம் எங்களுக்குப் புரியவில்லை"

மைக்கி தன் நகங்களின் அழுக்கைச் சுரண்டினான். "உங்களுக்கு நான் வைத்தியம் பார்க்கப் போகிறேன்"

"வாட்! எங்களுக்கென்ன, உடம்பு நன்றாகத்தானே இருக்கிறது"

"இல்லை... உங்களுக்குக் காய்ச்சல் வரப்போகிறது. அதற்கு நான்தான் என் மூலிகைகளை வைத்து சிகிச்சையளிக்கப் போகிறேன்"

"நீ சொல்வது எதுவும் புரியவில்லை"

"உனக்கு இப்போது என்ன வயதிருக்குமோ அதே வயதில் எனக்கொரு பிள்ளை இருந்தான், ராஜா" மைக்கி எங்கோ பார்த்துக் கொண்டு பேசினான். "அவனுக்கு திடீர் என்று காய்ச்சல் வந்து விட்டது. செத்துப்போய்விட்டான்"

"டாக்டரிடம் அழைத்துப் போகவில்லையா?"

"ஹ்... இங்கிலீஷ் டாக்டருக்கெல்லாம் என்ன தெரியும்? ஆண்டிபயாடிக் மாத்திரைகளாகத் திணித்து நம் உடம்பையே கெடுத்து விடுவார்கள். அதற்காகத்தானே நான் பெரிய இயற்கை ஹாஸ்பிடலே வைத்திருந்தேன். மூலிகைகளில் குணப்படுத்த முடியாத வியாதியே இல்லை. என் மகனுக்கு வந்த காய்ச்சலை வைத்து



மகிழந்தாரையைக் கசக்கி அதன் சாற்றைக் கொடுக்க வேண்டும் என்று கண்டுபிடித்தேன். ஆனால், சரியான டோஸேஜ் கொடுக்கவில்லையோ. என்னவோ... என் ஜேம்ஸ் செத்துப் போய்விட்டான். எனக்கு அப்புறம் என் ஹாஸ்பிடலையே நிர்வாகம் பண்ண வேண்டியவன் எனக்கு முன்னாலேயே போய் விட்டான்" மைக்கி திடீரென்று தேம்பித் தேம்பி அழுதான்.

ஜானகிராமனுக்கு மெல்ல தைரியம் வந்தது. அடிப்படையில் எதிரே இருப்பவன் சாதாரண உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் மனிதன். இவனை எப்படியாவது சமாளித்து விட்டுத் தப்பி விடலாம் என்ற நம்பிக்கை வந்தது.

"இதோ பார் மைக்கி. நீயே சொன்னாய் நாங்கள் உன் மகனைப் போல என்று. எங்களை விட்டு விடு மைக்கி..."

மைக்கி அழுகையை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான்.

"நோ, என் மகன் ஏன் செத்தான். என் மருந்தில் என்ன கோளாறு என்று நான் கண்டு பிடிக்க வேண்டாமா? அது கண்டு பிடிக்கும் வரை எனக்கு நிம்மதியில்லை. தூக்கமில்லை. உன்னைச் சுற்றிப் பார்த்தாயா எத்தனை பசுமை! எல்லாமே மருந்து, பச்சிலைகள் எனக்குக் குழந்தைகளைப் போல, விலாரிப் பட்டையை ஆகாரம் இல்லாமல் கொடுத்தால் என் ஜேம்ஸ்க்கு வந்த அதே காய்ச்சல் உங்களுக்கும் வந்து விடும். அப்புறம் அதற்கு எப்படி மருந்து கொடுக்க வேண்டும் என்று மாற்றிப் பார்ப்பேன்"

"மைக்கி நீ நினைப்பது அநியாயம்!"

"எது அநியாயம்? என் மகனைத் தொலைத்தபின் என்னை உலகமே பைத்தியக்கார டாக்டர் என்று துரத்தியதே.

நான் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தேன் என்று உனக்குத் தெரியுமா? என் மூலிகைத் தோட்டத்திற்கு திரும்ப முடியாமல் திரிகோண மலையில் நான் ஒளிந்து ஒளிந்து வாழ்கிறேனே, அதற்கென்ன சொல்கிறாய்? மூன்று வருடங்களாக இந்த தோட்டத்தை என் சகல ஜீவனையும் கொடுத்து உருவாக்கி வருகிறேனே. இது முட்டாள்தனமா? அந்த விதக் காய்ச்சலுக்கு நான் மருந்து கண்டுபிடிக்கும் வரை அந்த குகைக்கு வரும் உன்னைப் போன்ற முட்டாள்களைக் கொண்டு வந்து ஆராய்ச்சி செய்து கொண்டு தான் இருப்பேன்... என் ஆராய்ச்சியில் தோற்றுப் போனவர்களைப் பார்..."

மைக்கி அங்கிருந்து சாம்பல் குப்பையைக் காட்டினான்.

பாஸ்கரைப் பார்த்துத் திரும்பினான். "முதலில் நீ. உனக்குதான் விலாரிப் பட்டையைக் கொடுக்கப் போகிறேன்."

எழுந்து பாஸ்கரை நெருங்கினான்.

"பாஸ்கர் தன்னைப் பிணைத்திருந்த கொடிகளை அறுத்து விடும் துடிப்போடு திமிறினான். மைக்கி ஒருவித பச்சிலையை அவன் முகத்தில் வைத்து அழுத்த, நினைவுகள் அவனிடமிருந்து வேக வேகமாக நழுவின.

## நதிக்கரை ஞாபகம் 3

ஆகாயத்தில் மஞ்சள் பெயிண்ட். சூழ்நிலையில் மெல்லிய குளிர். ஸ்ஸ் என்று சீறும் காற்று.

அந்த மாருதி மலைப்பாதையில் ஒரு மூட்டைப் பூச்சியைப் போல் ஏறிக் கொண்டிருந்தது. காரின் சாத்திய கண்ணாடிகளுக்கு உள்ளே மைக்கேல்



ஜாக்ஸன் ஸ்டீரியோக்களில் ததும்பிக் கொண்டிருந்தார். காரை வளைத்து வளைத்து ஓட்டிக் கொண்டிருந்த இளைஞன் பின்புறம் திரும்பிப் பார்த்தான்.

"பசிக்கிறதா சசிகலா?"

"ஊஹூ"ம்"

சசிகலா கால்களை இன்னும் நீட்டி, கைகளை உயர்த்தி உடம்பை நெறித்தாள்.

"இன்னும் எத்தனை தூரம் இருக்கிறது, பீட்டர்?"

"இரண்டு கிலோ மீட்டர்கள். இப்பொழுது கூட நேரமாகவில்லை. நீ ஒரு வார்த்தை சொன்னால் காரை அப்படியே திருப்பி விடுகிறேன்."

"நான் அந்தக் குகையைப் பார்ப்பதில் உனக்கு அப்படி என்ன கஷ்டம் பீட்டர்"

"உன்னை பத்திரமாக கொண்டு சேர்க்கச் சொல்லி உன் அப்பாவின் உத்திரவு"

"நானென்ன லாலிபாப் சாப்பிடும் பாப்பாவா? இந்த அப்பாவைப் பார்த்தால் எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. கோடிக் கோடியாய் டர்ன்ஓவர் ஆகும் பிஸினஸ் இருக்கும்போது அதில் கான்ஸண்ட்ரேட் பண்ண வேண்டியது தானே? எதற்காக என்னை இன்னும் ஸ்கூல்கேர்ள் போல நடத்துகிறார்?"

"நீ அவருக்கு ஒரே மகள்"

"அதற்காக? நான் பாத்ரூம் போக வேண்டுமானால் கூட என் முதுகுக்குப் பின்னால் ஒரு காவல்! மகாபலிபுரம் போக வேண்டுமா, ராமச்சந்திரன், நீயும் கூடப்போ. ராமேஸ்வரம் விசிட் செய்யப் போகிறேனா. சவுந்தரராஜன், நீங்கள் கூடப் போங்கள். திரிகோண மலையின் சிற்பங்களைப் பார்க்க ஆசைப்பட்டேனா, பீட்டர் அவளை விட்டு நிமிஷ நேரம் நகராதே" "ஹீ லவ்ஸ் யூ ஸோ

பீட்டர் சிரித்தான்.

மச..."

"பீட்டர், நீயாவது என்னைப் புரிந்து கொண்டு வராமல் இருக்கலாம் இல்லையா?"

"உன் அப்பாவிடம் மாசம் முதல் தேதியானவுடன் மூவாயிரம் வாங்கும் கூலிக்காரன் நான். சசிகலாவை பத்திரமாகக் கூட்டிப்போ. பத்திரமாகக் கூட்டி வா என்று சொன்னால், அதுதான் பீட்டரின் முக்கியமான டூட்டி"

கார் இப்போது கடைசி வளைவில் திரும்பியது. மரத்தடி நிழலில் நின்று விட்டது.

"இதற்கு மேல் நடந்துதான் ஆக வேண்டும் சசிகலா"

"நடப்பதற்கு நான் ஏங்கிக் கொண்டிருக்கிறேன்"

சசிகலா கதவைத் திறந்து கொண்டு வெளியே சந்தோஷமாக இறங்கினாள். காமிராவும், அடிடாஸ் பையை இழுத்து தோளில் மாட்டிக் கொண்டாள். கதவைச் சாத்தி விட்டு கீழே இறங்கிய பீட்டரிடம், "பீட்டர், ப்ளீஸ், என்னைத் தனியாகப் போக விடு" என்று கைகளை அறைந்து கூப்பினாள்.

பின்னணியில் சூரியனின் ஆக்ரமிப்பு குறைந்து கொண்டே இருக்க அந்த நிழலான வெளிச்சத்தில் அவள் கூந்தல் தங்கக் கம்பிகளாக பறந்தது. ஜீன்ஸ் பாண்ட்டின் இறுக்கமும், காற்றில் உடம்போடு ஒட்டிக் கொண்ட மேல் சட்டையும் அவளுடைய அபாரமான வளைவுகளை ஆயில் பெயிண்ட் செய்தன.

பீட்டர் காரின் சூடான பானெட்டில் கைவைத்துத் தயங்கினான்.

"சசிகலா, உன் அப்பா"

"ஐ நோ. நான் ப்ளெயினாகவே



சொல்கிறேன், பீட்டர். நான் குகையில் பார்க்கப் போவது, போட்டோ எடுக்கப் போவது எல்லாம் ஒரு மாதிரியான சிற்பங்கள். கூட இன்னொரு ஆண் நிற்பதை விட தனியாகப் பார்த்தால் இன்னும் சுதந்திரமாக ரசிப்பேன். நீ வேண்டுமானால் ஒன்று செய். எனக்கு ஒரு மணி நேரம் கொடு. அப்புறம் குகைக்கு வந்து குரல் கொடு"

"உனக்காக செய்கிறேன் சசிகலா... அப்பாவுக்குத் தெரிந்தால்..."


"தெரியாது... பீட்டர் என்னை விட்டு இன்ச் கூட அசையவில்லை என்று நான் அப்பாவிடம் சத்தியம் செய்கிறேன்... ஓகே?"

சசிகலா பாறைகள் பதித்த அந்த மண்பாதையில் துடிப்பாக ஏறினாள். மலையின் பசுமை தேய்ந்து, அழுக்கான பாறைகளினூடே அந்த குகை வாசல்.

சசிகலா அந்த போர்டைப் படித்தாள்.

அபாயம்! துணை இல்லாமல்,
வெளிச்சம் இல்லாமல் உள்ளே
நுழையாதீர்கள்!

சசிகலா உதட்டைப் பிதுக்கி, அந்த எச்சரிக்கைக்கு அழகு காட்டிவிட்டு, டார்ச்சை உயிர்ப்பித்தாள். திரும்பி இந்த வாசல் வழியே வரப்போவதில்லை என்பதை அறியாமல், குகைக்குள் நுழைந்தாள்.



## நதிக்கரை ஞாபகம் 4

மரத்தின் உயரத்திலிருந்து மைக்கி சாசரவென்று சர்ப்பம் போல் இறங்கினான்.

"ஒரு கார் வந்திருக்கிறது. அதுவும் இந்த நேரத்தில் நான் போக வேண்டும்"

மைக்கியின் குரலில் ஒரு பரபரப்பு

இருந்தது. ஜானகிராமன், கொஞ்சம் தன் உடலை மரத்தில் கொஞ்சம் தளர்த்திக் கொண்டான். மைக்கி ஒரு பெரிய வாழையிலையில் சில பச்சிலைகளை வைத்து சுருட்டிக் கொண்டு வேகமாக மரங்களினூடே நடப்பதை அச்சத்தோடு பார்த்தான்.

கிட்டத்தட்ட முப்பது மணி நேரங்களாக ஒரே நிலையில் மரத்தில் கட்டப்பட்டிருந்ததில் உடம்பெங்கும் வலித்தது. எதிர்மரத்தில் பாஸ்கரின் தலை அவன் மார்பில் தொய்ந்திருந்தது. முகத்தில் ரத்தம் விலகி சோகையான நிறம் வந்திருந்தது.

மைக்கி இல்லாதபோது ஏதாவது அதிசயம் நடந்து, தப்பித்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஜானகிராமன் உடம்பில் மிச்சமிருந்த சக்தியையெல்லாம் சேர்த்துத் திமிறினான். பட் என்று ஒரு சின்ன சப்தம் கேட்டது.

ஜானகிராமன் ஆச்சரியத்தோடு பார்த்தான். மார்புக்கு குறுக்கே ஓடியிருந்த கொடிகளில் ஒன்று நைந்து விட்டது.

இன்னும் இன்னும் என்று உற்சாகத்தோடு ஜானகிராமன் உடம்பை முறுக்கி முயற்சி செய்ய ஆரம்பித்தான்.

ஒவ்வொரு சிற்பமாக டார்ச் அடித்து சந்தோஷத்துடன் காமிராவில் பதிவு செய்து கொண்டிருந்தாள் சசிகலா.

வெளியே இருப்பதை விட குகைக்குள் உஷ்ணம் அதிகமாயிருந்தது. வியர்வை முத்துக்கள் உடம்பெங்கும் அரும்பியிருக்க, சசிகலா குகைப் பாதையின் முடிவுக்கு வந்து விட்டாள்.

அங்கு பாதை இரண்டாகப் பிரிய, அந்தப் பாதைக்குள் யாரும் நுழையக் கூடாது என்ற எச்சரிக்கையோடு குறுக்கே ஒரு இரும்புக்



கம்பி கொடுக்கப்பட்டிருந்ததை கவனித்தாள்.

உள்ளே என்ன இருக்கும்?

ஆர்வம் உந்தித்தள்ள, சசிகலா அந்தக் கம்பிக்குக் கீழே உடம்பை வளைத்து இடது பாதையின் இருட்டில் திரும்பினாள்.

மைக்கி தன் ரகசிய இருட்டு குகைப் பாதையில் நடந்தான். அவன் மூக்கு விடைத்திருந்தது. மனித வாசனை!

தண்ணீரில் அதிக ஒலி எழுப்பாமல் மிதமாக நடந்தான். மன்மத ரதி சிற்பத்தின் காம வளைவுகளில் கால்களைப் பதித்து மேலே ஏறினான். அந்த கல் குகையின் கூரையிலும் பல சிற்பங்களை வடித்திருந்த பிஜு மகாராஜாவை வாழ்த்தினான். அந்த சிற்பங்களின் வடிவங்களைப் பிடித்துக் கொண்டு பல்லிபோல் கூரையில் நகர்ந்தான்.

எச்சரிக்கையை மீறி குகைக்குள் நுழைந்திருந்த இளம்பெண்ணை மைக்கி ஆச்சரியத்தோடு, பசியோடு பார்த்தான். தன்னந்தனியே! என்ன துணிச்சல் இவளுக்கு!

சசிகலா காமிராவின் எஸ்.எல்.ஆர். அமைப்பில் மன்மத ரதியைத் தீட்டிக் கொண்டு க்ளிக் செய்தபோது, தலையில் எதுவோ கொட்டியது.

மைக்கி தன் கைகளுக்கிடையில் அந்த பச்சிலையை வைத்து இன்னும் கசக்கினான். அதன் வினோத வாசனையால் கவரப்பட்டு சசிகலா நிமிர்ந்தாள். மேலே 'டார்ச் வெளிச்சத்தை வீசினாள்.

சிற்பங்களின் நடுவே இலையாடைகளுடன் அழுக்காகத் தொங்கிக் கொண்டிருந்த மைக்கியைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். அலறினாள். வழக்கம் போல அந்த அலறல் குகைக்கு உள்ளேயே

எதிரொலித்துக் கொண்டிருக்க, மைக்கி பச்சிலை சாற்றை சசிகலாவின் முகத்தில் வீசினான். அவள் மீது குதித்தான்.

மயங்கிச் சரிந்து விட்ட சசிகலாவிடமிருந்து காமிராவையும், டார்ச்சையும் பறித்தான். நடந்து குகையின் முதல் பாதை அருகே வீசினான். வேறு எந்த அடையாளத்தையும் விட்டு விடவில்லை என்ற நிச்சயத்தோடு சசிகலாவை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டான்.

ஜானகிராமன் உடம்பை நெளித்தான். அவனைச் சூழ்ந்திருந்த கொடிச் சுருள்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு வெளியே வந்தான். அவன் நெஞ்சம் கழுகின் சிறகுகளைப் போல அடித்துக் கொண்டது.

தப்பித்துவிட்டேன், தப்பித்து விட்டேன்!

பதறும் உணர்ச்சிகளோடு, உடம்பை உதறிக் கொண்டான். கைகளைத் தேய்த்து ரத்த ஓட்டத்தை சீராக்கினான். திடீர்க் காற்றின் குளிருக்கு உடம்பு நடுங்கியது. பரபரப்பாக எதிர்மரத்திற்கு ஓடினான்.

பாஸ்கரைத் தொட்டதும் கையை உதறினான். பாஸ்கருக்கு கடுமையான காய்ச்சல் அடித்தது. உடம்பின் உஷ்ணம் சுற்றி ஒரு ரேடியேஷன் வட்டமே போட்டிருந்தது.

ஜானகிராமன் பாஸ்கரின் முகத்தை இரு கைகளாலும் தட்டினான்.

"பாஸ்கர், கமான், பாஸ்கர்!"

பாஸ்கரிடம் அசைவு இல்லை.

நேரம் வீணாகிக் கொண்டிருந்தது. பாஸ்கரின் கட்டுக்களை அவிழ்த்து அவனை இழுத்துக் கொண்டோ, தூக்கிக் கொண்டோ தப்பி விடுவதுதான் சாத்தியம். ஜானகிராமன் தரையிலிருந்து கூரான முனையுடன் ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்தான். பாஸ்கரைக்



கட்டியிருந்த கொடிப்பின்னலை அதை வைத்துக் கொத்த ஆரம்பித்தான்.

அந்த சப்தம் அல்லது கொடியின் திடீர் அசைவு ஏதோ ஒன்று பாஸ்கரை எழுப்பியது. கனத்த இமைகளைப் பெரு முயற்சியோடு திறந்தான்.

ஜானகிராமனின் குரலில் உற்சாகம் சேர்ந்தது.

"பாஸ்கர், நாம் தப்பிக்கப் போகிறோம்... கமான், கெட் அப்... கவனி... கவனி..."

அவன் அலறியதெல்லாம் பாஸ்கருக்கு மலைக்குப் பின்புறமிருந்து பேசுவது போல சன்னமாகக் கேட்டது. கண்களை மறுபடி மூடிக் கொண்டான்.

ஜானகிராமன் தவித்தான். இவனை எப்படியாவது...

அவன் கேட்ட சத்தம் அவனை உறைய வைத்தது.

சளக் சளக்!

மைக்கி!

தூரத்திலிருந்த மைக்கி இவனைப் பார்த்தான். அவன் உடம்பில் உடனே ஒரு பரபரப்பு தொற்றிக் கொள்ள, சசிகலாவைக் கீழே போட்டான்.

"ஹேய்" என்று கத்திக் கொண்டே ஜானகிராமனை நோக்கி ஓடினான்.

இனி நேரமில்லை என்று ஜானகிராமன் உணர்ந்தான். மைக்கியுடன் போராடலாம். நிச்சயம் அவனை விட தனக்கு பலம் அதிகம். ஆனால், எதிர்பாராத நேரத்தில் மைக்கி பச்சிலைச் சாற்றை தெளித்து மறுபடியும் மயக்கத்திற்குள் தள்ளி விட்டால்...

ஜானகிராமன் கிடைத்த வாய்ப்பைத் தவற விடக்கூடாது என்று முடிவு செய்தான். தன் கையிலிருந்த கல்லை மைக்கியின் மீது குறி பார்த்து வீசிவிட்டு, எதிர்த்திசையில்

அவன் கால்கள் அனுமதித்த வேகத்தில் ஓடினான்.



## நதிக்கரை ஞாபகம் 5

மைக்கியின் முகத்தில் நேரே மூக்கை வந்து தாக்கியது அந்தக் கல். மைக்கி மூக்கைப் பிடித்துக்கொண்டு, உதிரும் உதிரத்தைத் தொட்டுக் கொண்டு, ஜானகிராமனின் பின்னே சிறிது தூரம் ஓடிப்பார்த்தான்.

நடுவில் ஒரு மரவேர் தடுக்கி விட குப்புறமடித்து விழுந்தான். கைகளை ஊன்றி அவன் நிமிர்ந்தபோது, ஜானகிராமனைக் காணவில்லை.

ப்ஹா... ப்ஹா... ப்ஹா...

மெக்ஸிகோ காளை போல் மூச்சிரைத்தது. முழங்காலில் ரத்தத்திட்டு, மைக்கி மெல்ல மெல்ல மரங்களைப் பிடித்துக்கொண்டு நடந்தான். சசிகலாவை இறக்கியிருந்த இடத்திற்கு.

முதல் பிழை.

ஜானகிராமன் தப்பித்து விட்டால் இந்த மூலிகைத் தோட்டத்திற்கே ஆபத்து. இந்தப் பெண்ணை மரத்தில் கட்டிவிட்டு, ஜானகிராமனை மும்முரமாகத் தேடிப் பார்க்க வேண்டும்.

கவிய ஆரம்பித்துவிட்ட இருட்டை பீட்டர் நிமிர்ந்து பார்த்தான். மெலிதாகக் கவலைப்பட்டான். மண் பாதையில் வேகமாக மேலேறினான்.

குகை வாசலைக் கண்டு பிடித்து, "சசிகலா, சசிகலா" என்று குரல் கொடுத்தான். குரல் மட்டும் திரும்பி வந்தது. சசிகலா வரவில்லை.

படபடக்கும் நெஞ்சோடு குகைப்



பாதையில் நுழைந்தான்.

"சசிகலா... சசிகலா... சசிகலா..."

கண்களை இருட்டுக்குப் பழக்கப்படுத்தி நடந்தான். காலில் ஏதோ இடறியது. சசிகலாவின் காமிரா! சக்தி வாய்ந்த அவளுடைய டார்ச்!

பீட்டர் டார்ச்சை எடுத்தான். வெளிச்சத்தைப் பீய்ச்சி நான்குபுறமும் பரபரப்பான கண்களை ஓட்டினான்.

சசிகலா எங்கும் இல்லை. நெஞ்சு முழுவதும் சிகரெட் புகைபோல் கிலி பரவ, பதினைந்து நரக நிமிடங்களில் முடிவுக்கு வந்தான்.

சசிகலா தொலைந்து விட்டாள்!

அவளுடைய அப்பா சந்திரபூபதி. அவனுடைய எஜமானர் இதற்கு நிச்சயம் பெரிய பரிசாகத்தான் தரப் போகிறார் என்ற பயமும் உணர்ச்சிகளைத் தாக்க, காமிராவையும், டார்ச்சையும் பொறுக்கிக் கொண்டு, குகையை விட்டு விரைவாக வெளியேறினான்.

ஜானகிராமன் கால் இடற, மலைப் பாதையில் வேகமாக ஏறினான். மலையின் உச்சியை அடைந்து எதிர்ப்புறம், இறங்கி விட்டால், தப்பிவிடலாம் என்ற நம்பிக்கை அவன் தளர்ந்த உடலுக்குள் டானிக் போல் படர்ந்தது.

சசிகலாவை உட்கார்த்தி வைத்து மரத்தோடு அவசரமாக மைக்கி கட்டிப் போட்டது உயரத்திலிருந்து ஜானகிராமனுக்குத் தெரிந்தது. ஒளிந்திருந்து. சந்தர்ப்பம் பார்த்து அவர்களைக் காப்பாற்றுவதா? அல்லது தான் முதலில் தப்பித்து வெளியிலிருந்து உதவியை அழைத்து வருவதா. எது உசிதம்?

தப்பித்துக் கொள், தப்பித்துக் கொள்!

மைக்கி தலை நிமிர்ந்தான். இருட்டில் கண்களைப் பழக்கி எல்லா திக்கிலும் பார்வையை ஓடவிட்டான். ஜானகிராமனின் நிழலசைவு அவனுடைய ஆர்வமான பார்வையிலிருந்து தப்பிவிட்டது.

மைக்கி எழுந்து கொண்டான். அவன் கையில் இப்போது ஒரு ராட்சஸ டார்ச். அதன் வெளிச்சத்தைப் பீய்ச்சி மரங்களை மெழுக ஆரம்பித்தான். மரங்கள் இப்போது பூதாகரமான நிழல்களை பிரதேசமெங்கும் எறிய, ஜானகிராமன் அசைவில்லாமல் நின்றான். மைக்கியின் டார்ச் தன் இலக்கை மாற்றிக் கொண்டதும் நகர்ந்தான். மரங்களின் அடர்த்தி குறைந்து பாறைகள் பெருக ஆரம்பித்து விட்ட நிலை. முதல் பாறையின் பின்னே வெகு அவசரமாக ஒளிந்தான்.

மைக்கி நடையும், நம்பிக்கையும் தளர்ந்தவனாக, ஒரு கடமைக்காக அந்த பிரதேசம் முழுவதும் டார்ச் அடித்துக் கொண்டிருக்க, ஜானகிராமன் சுலபமாக அடுத்த பாறை, அதற்கடுத்த பாறை என்று ஒளிந்து ஒளிந்து நகர்ந்தான். திடீரென்று பாதையில் ஒரு சரிவு ஏற்பட, மலைக்கு மறுபுறம் வந்து விட்டது புரிந்தது.

அந்த உயரத்திலிருந்து அவர்கள் நுழைந்த குகையின் வாசல் தெரிந்தது. சில படிகளுக்குக் கீழே ஒரு மாருதி கார் நின்றிருக்க, அதன் கதவைத் திறந்து ஒரு ஆள் ஏறுவது தெரிந்தது.

ஜானகிராமன் கைகள் இரண்டையும் சேர்த்து வேகமாகத் தட்டினான். அந்த ஒலி காற்றில் திசைமாறி கார் வரை பயணம் செய்யவில்லை. காரில் ஏறியவன் அதன் கதவைச் சாத்திக் கொள்ள, மலைப் பாதையின் பாம்பு வளைவுகளில் சிகப்புப் பின் விளக்குகள் மட்டும் காட்டி உடனே



விரைந்தது.

ஜானகிராமன் ஏமாற்றத்துடன் மெல்ல இறங்க ஆரம்பித்தான்.

## நதிக்கரை ஞாபகம் 6

பாஸ்கருக்குத் திடீரென்று விழிப்பு வந்தது.

காதோரம் ஏதோ ஒரு பூச்சி ரீங்காரம் செய்து கொண்டு பறக்க தலையை அவசரமாக நகர்த்திய போதுதான் கவனித்தான். அவனால் முன்பை விட சுதந்திரமாக அசைய முடிந்தது. சற்றே ஆச்சரியம் தாக்க குனிந்து பார்த்துக் கொண்டான். சுற்றியிருந்த கொடிப் பின்னல் தளர்ந்திருந்தது. ஜானகிராமன் கல்முனையில் அடித்து காயப்பட்ட இடங்கள் நைந்து போனதால் இறுக்கம் குறைந்து விட்டது என்பது பாஸ்கருக்கு மசமசப்பாக உறைத்தது.

கண்களைச் சிமிட்டினான். பூரணமாகத் திறந்தான்.

இன்னும் இருள் கூடியிருந்தது. நிலா வெளிச்சம் மரங்களினூடே நுழைந்து ஸ்கேல் ஸ்கேலாகப் படிந்திருந்தது. ஜானகிராமனைக் கட்டியிருந்த மரத்தில் இப்போது ஒரு பெண் கட்டப்பட்டிருப்பது பாஸ்கருக்குத் தெரிந்தது. அவனுடைய உடம்பில் காய்ச்சல் விலக ஆரம்பித்திருந்தது. புலன்கள் சுறுசுறுப்பாக உயிருக்கு வர, கண்களை ஓட்டி மைக்கியைத் தேடினான்.

நான்கு மரங்கள் தள்ளி மைக்கி கீழே அமர்ந்திருந்தான். அவன் காலடியில் டார்ச் அணைக்கப்பட்டு வீற்றிருந்தது. கீழேயிருந்த முரட்டுக் கல்லில் ஒரு பச்சிலையை வைத்து இன்னொரு கல்லால்

கூழாக்கி காயப்பட்ட தன் மூக்கில் தடவி
கொண்டிருந்தான் மைக்கி. அவன் மனதை
ஜானகிராமன் தப்பித்துப் போன விஷய
இன்னும் உலுக்கிக் கொண்டிருக்க, கவன
சிதைந்திருந்தது.

பாஸ்கர் அசைய முற்பட்ட சத்தத்தை
அவன் தவற விட்டான்.

பாஸ்கர் எதிரே பார்த்தான். மெல்ல ஒரு
கையை கட்டிலிருந்து விடுவித்து விட்டான்.
சசிகலா மயக்கத்தின் பிடியிலிருந்து மெல்ல
மீண்டு கொண்டிருந்தாள். கண்கள்
அசைந்து, இமைகளைக் கஷ்டப்பட்டு
திறந்து, உடனே சூழ்நிலை புரிந்து அவள்
அலற முற்பட, பாஸ்கர் உதடுகளுக்குக்
குறுக்கே ஒற்றை விரலை வைத்து
எச்சரித்தான்.

நிலா வெளிச்சத்தில் பாஸ்கரும்
கட்டப்பட்டிருப்பதை சசிகலா கவனித்தாள்.
இன்னும் ஒரு கைதியா?

கண்களை மூடிக் கொள் என்று பாஸ்கர்
சைகை செய்தான். சசிகலாவுக்கு உடனே
புரிந்தது. மைக்கி கவனிக்கையில் தான்
இன்னும் மயக்கத்தில் இருப்பது போல்
நடிக்க வேண்டும். எதிரே இருக்கும்
இளைஞன் அவளுக்கு பெரு
நம்பிக்கையாகத் தென்பட்டான்.

தான் பிடிபட்டு எத்தனை நேரமாயிற்று?
பீட்டர் இன்னும் அதே இடத்தில்
காத்திருப்பானா? அல்லது கிளம்பிப்
போயிருப்பானா?

பீட்டர் ரிசீவரை நடுங்கும் கையில்
பிடித்திருந்தான்.

எதிர்முனையில் சந்திரபூபதி தூக்கம்
கலைந்து ரிசீவரை எடுத்தார்.

"ஹூ இஸ் தட்?" குரலில் குரைப்பு
இருந்தது.

"சார், நான் பீட்டர்"



"என்ன பீட்டர்? இப்போதுதான் தூங்கப் போனேன். சசி என்னிடம் பேச வேண்டுமா? ரிசீவரைக் கொடு"

"அதில்லை சார். ஒரு சின்னத் தவறு நடந்து விட்டது"

"தவறா?"

"திரிகோணமலை குகைகளுக்குள் சசிகலா தனியாகப் போனாள். எங்கோ வழி தவறி விட்டாள் என்று நினைக்கிறேன்"

"என்னது?"

"குகைக்கு உள்ளே பயங்கர இருட்டாக இருக்கிறது சார். நான் பக்கத்து ஸ்டேஷனிலிருந்து போலீசை உதவிக்குக் கூப்பிட்டிருக்கிறேன். உங்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்று நான் போன் செய்தேன்"

"சசிகலாவை ஏன் தனியாக விட்டாய்? பீட்டர் இதற்கு நீ நிச்சயம் பொறுப்பேற்க வேண்டும். நான் இதோ கிளம்பி விட்டேன். என் பெயரைச் சொல். தமிழ்நாட்டின் அத்தனை போலீஸும் ஃபயர் சர்வீஸும் தேடட்டும்" சந்திரபூபதி ரிசீவரை அறைந்து சாத்தினார்.

பாஸ்கர் ஒரு சின்ன முனகலை வெளிப்படுத்தினான்.

மைக்கி அதிர்ந்து நிமிர்ந்தான். பாஸ்கர் மரத்தில் நெளிவது கண்டு எழுந்தான். கால்களை தேய்த்துத் தேய்த்து நடந்து வந்தான். பாஸ்கருக்கு விலாரிப் பட்டை சாறு கொடுக்க மறந்து விட்டதை நொந்து கொண்டான்.

விலாரிப்பட்டையை எடுத்துக் கொண்டு, பாஸ்கரை சந்தேகமில்லாமல் நெருங்கினான்.

பாஸ்கர் தன் உடம்புக்கு பின்னே சடாரென்று மறைந்திருந்த கைகளைச்

வெளியே எடுத்தான். மைக்கியின் தலையை இரு கைகளாலும் பற்றிக் குனிய வைத்து, தன் முழங்காலை உயர்த்தி அவன் முகத்தில் இடித்தான். ஏற்கனவே காயமான அதே மூக்குத்தண்டில் பாஸ்கரின் ஆவேசமான முழங்கால் இறங்கியதும் மைக்கி செயலிழந்தான். அச்சமும், பரபரப்பும் தொற்றிக் கொள்ள இரண்டு கைகளையும் வீசி செயலிழந்தான். பாஸ்கரைப் பிடிக்க முயல, பாஸ்கரின் முழங்கால் இப்போது மைக்கியின் நெஞ்சில் கும்க் என்று இறங்கியது.

மைக்கி மூச்சு அத்தனையையும் தொலைத்தான். பாஸ்கரின் காலடியில் கவிழ்ந்து துணி போல் விழுந்தான். பாஸ்கர் தன்னிடம் மிச்சமிருந்த பலம் அத்தனையையும் சேர்த்து மைக்கியின் முதுகிலும் உதைத்தான்.

கட்டுகளிலிருந்து சுலபமாக விடுபட்டான். குனிந்து மைக்கியை அசைத்துப் பார்த்தான்.

மூக்கோரம் ரத்தம் வழிய, மைக்கி பெரிய பெரிய மூச்சுகளாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். விழிகள் ஓரிடத்தில் பதிய முடியாமல் கலைந்து சுழன்றன.

குறைந்தது ஒரு மணி நேரத்திற்காவது இவனிடமிருந்து அசைவு இருக்காது என்று பாஸ்கர் முடிவு செய்தான். கால்கள் தொய்யத் தொய்ய எதிர் மரத்திற்கு மைக்கியை மிதித்து நடந்தான். முடிச்சுகளைத் தேடினான். அவிழ்த்தான்.

சசிகலா உணர்ச்சிகளின் வெடிப்பில் கண்களில் சந்தோஷக் கண்ணீர் ததும்ப, பாஸ்கரை அப்படியே அணைத்துக் கொண்டாள்.

பாஸ்கர் அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.



சோர்ந்திருந்த அவன் உடம்புக்குள் நூறாயிரம் இடங்களில் புது ரத்தம் பிரவாகம் ஆனது போல் இருந்தது.. பாஸ்கர் எந்தப் பெண்ணையும் இவ்வளவு நெருக்கத்தில் பார்த்ததில்லை.

சசிகலாவின் முகத்திலும், உடம்பிலும் சேறும், அழுக்கும் தீற்றப்பட்டிருந்த போதும், அத்தனையையும் மீறி அவளிடத்தில் ஒரு நூதனமான பிரகாசம் இருந்தது. அவளுடைய பெரிய கரு விழிகள், ஷார்ப்பான மூக்கிலா, குவிந்த உதடுகளிலா, சற்றே அண்ணாந்திருந்த நெற்றியிலா, பாஸ்கர் அந்த பிரகாசத்தில் ரிஷிமூலம் புரியவில்லை.

சசிகலா அவனிடமிருந்து விலகிய பின்னரும் உடம்பில் நடுக்கம் ஓடிக் கொண்டிருந்தது.

"என் பெயர் பாஸ்கர்" தயங்கும் குரலில் சொன்னான்.

"ஐம் சசிகலா. என்ன ஒரு சூழ்நிலையில் நாம் சந்திக்கிறோம்! வா, முதலில் இந்த நரகத்திலிருந்து தப்பவேண்டும்"

"இந்த காட்டுமிராண்டி எழுந்து விட மாட்டானே?"

"மாட்டான். ஆனால் நம்மை விட, இந்த பகுதியைப் பற்றி இவனுக்குத்தான் அதிகமாகத் தெரிந்திருக்கும், ஸோ, நம் தப்பும் வழியை உடனே தேட வேண்டும்"

"என்னால் வேகமாக நடக்க முடியாது." என்றாள் சசிகலா.

"இவன் கொடுத்த பச்சிலையில் எனக்கு தூக்கம் தூக்கமாக வருகிறது"

"நோ, சோம்பலாக சாய்ந்து விடாதே. இவன் எழுந்து விட்டால் அப்புறம் நமக்கு சான்ஸ் இல்லை. கமான்"

சொல்லிவிட்டானே தவிர பாஸ்கரின் கால்களும் ஒத்துழைக்க மறுத்தன.

பூமியோடு ஒட்டிக் கொண்டு விட்டது போல, இழுத்து இழுத்து நடந்தான். சசிகலா அவன் தோளை பிடித்துக் கொண்டதும் அவனுக்கு இன்னும் கிர் என்று மயக்கம் இழுத்தது. மைக்கியிடமிருந்து டார்ச்சை எடுத்துக் கொண்டான்.

"உனக்கு வழி தெரியுமா?" சசிகலா ஆர்வமாகக் கேட்டாள்.

"அதற்கு மலையை ஏறி இறங்க வேண்டுமே"

"நிச்சயம் இன்றைக்கு என்னால் முடியாது! அதற்குள், இந்தக் காட்டுமிராண்டியே நம்மைப் பிடித்து விடுவான்"

"அவன் காட்டு மிராண்டி இல்லை, டாக்டர்"

"டாக்டரா! ஸ்டோன் ஏஜைச் சேர்ந்த டாக்டரா?" சசிகலா சிரித்தாள். "இந்தப் பக்கம் என்ன இருக்கிறது. உனக்குத் தெரியாதா?"

"ஏதோ ஒரு கிராமம் இருப்பதாக யாரோ சொன்னான் ஞாபகம்"

"அப்படியென்றால், ஒன்று செய்வோம். மலை ஏறுவதை விட இறங்குவது சுலபம், நாம் இந்தப் பக்கம் இறங்கி விடுவோமே"

"சரி" என்றான் பாஸ்கர். "ஆனால் இத்தனை இருட்டாயிருக்கிறதே"

"பரவாயில்லை. இவனிடமிருந்து எவ்வளவு தூரம் போக முடியுமோ, அவ்வளவு தூரம் போய் விடுவோம்" சசிகலா பாஸ்கரின் கையுடன் தன் கையைக் கோர்த்துக் கொண்டாள்.

எந்த திசையில் இறங்கினால் கிராமம் வருமோ, அதற்கு எதிர் திசையில் பாதை தெரியாமல் அவர்கள் இறங்க ஆரம்பித்தார்கள்.



## நதிக்கரை ஞாபகம் 7

நள்ளிரவு தாண்டி இரண்டு மணி நேரங்கள் ஆகியிருந்தன.

திரிகோண மலையின் தார் ரோடுகளில் போலீஸ் ஜீப்கள், ஏழு ஆம்புலன்ஸ், இரண்டு கார்கள் நின்றிருந்தன.

குகையின் உள்ளே பிரகாசமான விளக்குகள் அடிக்கப்பட்டு, காக்கி உடுப்பு போட்ட ஆட்கள் நடமாடினார்கள்.

இன்ஸ்பெக்டர் இனியராஜ் குகைக்குக் குறுக்கே நீண்டிருந்த தடுப்புக் கம்பியருகே வந்து நின்றார்.

"இந்த இடத்தில்தான் டார்ச்சும், காமிராவும் கிடந்தன" பீட்டர் குனிந்து காட்டினான்.

சந்திரபூபதி தன் ஆறடி உடம்பை மூச்சிரைக்க நடத்தி வந்து, அந்தக் கம்பியில் சாய்த்துக் கொண்டார். "சசிகலா" என்று அநாவசியமாக குரலெழுப்பிப் பார்த்தார்.

"இந்தக் கம்பியைத் தாண்டிப் போயிருந்தால்தான் வம்பு" இனியராஜ் டார்ச் வெளிச்சத்தை உள்பாதையில் அடித்துச் சொன்னார். இரண்டு புறமும் பிரியும் குகை பாதைகளில் பெரிய சிக்கல் இருக்கிறது. அங்கங்கே பாறை பிரிந்து கொண்டேயிருக்கும். இடது, வலது, இடது வலது என்று சுழன்று சுழன்று வட்டமடித்துக் கொண்டிருப்போமே தவிர, வெளியே வரும் வழியே தென்படாது" இந்தப் பாதையில் உங்கள் மகள் போயிருந்தால் கண்டு பிடிப்பது கஷ்டம்.

"கஷ்டம்! போலீஸ் உபயோகிக்கக் கூடாத வார்த்தை, இன்ஸ்பெக்டர். உங்களால் முடியாதென்றால் சொல்லி விடுங்கள். நான் டெல்லிக்கு போன் செய்தால் ஆர்மியே

வரும்" சந்திரபூபதியின் முகம் கோபத்தா[ல்] சிவந்து விட்டது.

"நோ, நோ இனியராஜ் அவசரமா[க]ப் பதறினார். 'கான்ஸ்டபிள்ஸ், கம் ஹியர். நா[ம்] எப்படி செயல்படப் போகிறோம் என்றால், நீளமான ஒரு கயிற்றை இந்தக் கம்பியி[ல்] ஒரு முனையை கட்டிவிட்டு மறுமுனையை உங்கள் இடுப்புகளில் கட்டிக் கொண்டு, குகையின் வெவ்வேறு பாதையில் நுழைந்து தேடப் போகிறீர்கள். நீங்கள் பாதையைத் தொலைத்து விடாமலிருப்பதற்கு இந்தக் கயிறு."

காரியங்கள் கறுகறுப்பாவதை கவனித்து சந்திரபூபதி சற்றே ஆறுதலுடன் குகையின் வாசலுக்கு நடந்தார்.

"ஐ வில் வெயிட் இன் மை கார்"

ஜானகிராமன் அந்தப் பாறையின் முனையில் இருந்தான். குனிந்து பார்த்தான். அந்த இடத்தில் நூறடிக்கு மலைப் பாறை செங்குத்தாக இறங்கியது. எந்த விதப் பிடிப்பும் இல்லாமல் இறங்குவது என்பது முட்டாள்தனம். சற்று நகர்ந்து பாறையின் முனையிலிருந்து எட்டிப்பார்த்த போது போலீஸ் ஜீப்கள் தென்பட்டன.

ஜானகிராமனின் ரத்தத்தில் நம்பிக்கை கலந்தது!

"ஹலோ... ஹலோ... ஹலோ!" என்று தன் குரல் அனுமதித்த அளவிற்குக் கத்தினான். ஏழாவது முறைதான் குரல் கீழ்வரை எட்டியது.

ஜீப்பின் சீட்டில் பீடி பிடித்துக் கொண்டிருந்த டிரைவர் அசிரத்தையாக தலையை நிமிர ஜானகிராமன் துடிப்போடு தன் கையை வீசி வீசி ஆட்டினான். டிரைவர் பீடியை தூர எறிந்துவிட்டு, கால்களில் வேகம் சேர்த்துக் கொண்டு குகைக்குள் ஓடினான்.



மைக்கி தலையை உலுக்கிக் கொண்டு எழுந்தான். எழுந்ததும், அவனுடைய புலன்கள் கூர்ப்பாயின.

தப்பித்து விட்டார்கள்!

மைக்கி பரபரப்பாக இரண்டு மரங்களையும் அண்டி ஆராய்ந்தான். அவன் பயன்படுத்திய காட்டுக் கொடிகள் அவிழ்ந்து கீழே கிடந்தன. காற்றில் சாம்பல் மட்டும் கலந்து வந்தது.

அவனுடைய டார்ச்சைக் காணவில்லை.

மைக்கி வேகமாக யோசித்தான்.

இந்த மலைப் பிரதேசம் அவனுடைய உள்ளங்கை ரேகைகளைப் போல அவனுக்குப் பழக்கமாயிருந்தது.

இது, திரிகோண மலையின் பின்புறம், இந்த மலையும், இன்னும் இரண்டு தொடர்ச்சி மலைகளுமாக சேர்ந்து வாய் அகன்ற ஒரு கண்ணாடிக் கோப்பையைப் போல உயரமாய் நின்றிருந்தன. கோப்பையின் அடிபாகத்தில் கீழ் மினலல் கிராமம், அது ஒரு சாதுவான கிராமம்.

திரிகோண மலைக்கு அந்தப்புறம் இறங்கி ரோட்டைப் பிடித்தால் ஊட்டி போகும் பாதையைத் தொடலாம். ஆனால், மற்ற இரண்டு மலைப்பகுதிகளின் மறுபுறங்களில் என்ன இருக்கின்றது என்பது மட்டும் மைக்கிக்கு சரியாகத் தெரியாது.

கிராமத்திற்குப் போகும் சரிவை விடுத்து மற்ற சரிவில் இறங்கினால் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் கொண்டு விடும் என்பது மைக்கிக்குத் தெரியும்.

நிச்சயம் பச்சிலைகளின் வேலையில் அந்த இருவருக்கும் மலையேறும் தெம்பு இருக்காது. சரிவுகளில் இறங்கித்தான் தப்பிக்க முயற்சி செய்வார்கள்.

கிராமத்தை நோக்கி இறங்கியிருந்தால்,

மைக்கியால் இனி ஒன்றும் செய்ய முடியாது. கிராமத்திலிருப்பவர்கள் அவன் இருப்பதை அறிந்து கொள்வதில் அவனுக்கு என்றைக்கும் விருப்பமில்லை.

ஆரம்பத்தில் தப்பித்துப் போனவன் மலையில் ஏறுவதை மைக்கி கவனித்திருந்தான். அந்த ஜானகிராமன், வெளியுலகத்தை அடைந்திருந்தால் எந்நேரமும் ஒரு படையே இந்த இடத்தைத் தேடிக் கொண்டு வரக்கூடும்.

அதற்கு முன் இந்தத் தோட்டத்தை விட்டுப் புறப்பட வேண்டும் என்று மைக்கி முடிவு செய்தான்.

பெரிய துணி ஒன்றைக் கீழே விரித்தான் பல பச்சிலைகளையும், விஷச் செடிகளையும் அவசரமாகப் பறித்து அந்தத் துணியில் மூட்டை கட்டிக் கொண்டான். ஒரு பாறையை நகர்த்தி, அதன் மறைவில் அவன் வைத்திருந்த கத்தி, தோட்டக் கத்திரி, கடப்பாறை எல்லாவற்றையும் அள்ளி இன்னொரு மூட்டை கட்டினான்.

குகையின் ரகசிய வழி வேறு யாருக்கும் தெரியாது. இந்தத் தோட்டத்தை அடைய வேண்டுமென்றால் அந்தப் புறமிருந்து மலையேறி இறங்க வேண்டும். அப்படி யாரும் அவனைத் தேடி வந்து சேர்வதற்கு கட்டாயம் ஆறு மணி நேரங்களாவது ஆகும். அதற்குள் மைக்கி காற்றில் கலந்திருப்பான்.

மைக்கி தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

தப்பித்துப் போன பாஸ்கரும், சசிகலாவும் தன் கையில் சிக்கினால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

அவனுக்குத் தெரியாமலேயே, மைக்கியும் அவர்கள் தேர்ந்தெடுத்த அதே பாதையைத் தேர்ந்தெடுத்து சரிவுகளில் இறங்க



ஆரம்பித்தான். ஆனால் பாஸ்கர், சசிகலாவை விட அதிக வேகமாக.

## நதிக்கரை ஞாபகம் 8

காய்ந்த சருகுகள் காலடியில் உடைபட்டன. தண்ணீர்த் தோய்ந்த புல்லும் பாறையும் கலந்த பகுதிகள் சற்றே வழுக்கின. பாஸ்கரும், சசிகலாவும் அங்குலம் அங்குலமாக கவனமாக இறங்கிக் கொண்டிருந்தார்கள். பயிற்சி இல்லாத பாதை.

"ஹா!" சசிகலா திடீரென அலறினாள். "என்னை எதுவோ கடித்து விட்டது"

"எங்கே" பாஸ்கர் டார்ச்சை அவள்புறம் திருப்பினான்.

"காலில்"

பாஸ்கர் உட்கார்ந்து அவள் காலைப் பற்றிப் பார்த்தான். பெயர் தெரியாத சுருட்டைப் பூச்சி ஒன்று அவள் காலில் ஒட்டிக் கொண்டிருக்க, அதைத் தேய்த்து விலக்கினான். ஜீன்ஸ் அணிந்த அவள் பாதத்தைக் கீழே விட்டான்.

"எனக்கு பயமாயிருக்கிறது!. இன்னும் எவ்வளவு தூரம் இப்படி இறங்கிக் கொண்டேயிருப்பது? பகல் வேளையாயிருந்தாலும் கிராமம் எது என்று கண்டு பிடிக்கலாம். இருட்டில் தவறான டைரக்ஷனில் போய்க் கொண்டிருந்தோம் என்றால்?"

"என்ன செய்ய வேண்டுமென்கிறாய்? நாம் அந்தக் காட்டுப் பயலிடமிருந்து தப்பியதுதான் அவசரம்"

"விடிந்து விட்டால், நல்ல வெளிச்சத்தில் நாம் சுலபமாக இறங்கி விடலாம். அதுவரை கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டால் என்ன?"

"இங்கே உட்கார்ந்தா?" பாஸ்கர் தான் நசுக்கிப்போட்ட பூச்சியைக் காட்டினான். "இதைப் போல் இன்னும் ஆயிரம் விஷப் பூச்சி இங்கே இருக்கலாம். சரி வா, இன்னும் கொஞ்சம் இறங்கியவுடன் ஒரு பெரிய பாறை தெரிகிறது. அதில் உட்கார்ந்து ரெஸ்ட் எடுப்போம்"

அவர்கள் இப்போது திரிகோண மலையிலிருந்து விலகி அடுத்த மலையின் சரிவுக்குள் பிரவேசித்து விட்டதை அறியாமல் நடந்தார்கள். சசிகலா நான்கடி நடந்ததும் உட்கார்ந்து விட்டாள். "என்னால் முடியவில்லை"

"சரி, உட்கார்ந்தபடியே சறுக்கிக் கொண்டு இறங்குவோம்" பாஸ்கர் அவளருகே உட்கார்ந்து அவளை ஆதரவாக பற்றிக் கொள்ள இருவருமாக சரிந்து இறங்குவதை மைக்கி உயரத்திலிருந்து பார்த்தான்.

ஜானகிராமன் ஆம்புலன்ஸில் படுத்திருந்தான். ஜூனியர் டாக்டர் அவனுடைய சிராய்ப்புகளுக்கு மருந்து தடவி, அவனுடைய ரத்த ஓட்டத்தை சீராக்க இன்ஜெக்ஷன் போட்டார். போலீஸ் தலைகள் அவன் மேல் குனிந்திருக்க, ஜானகிராமன் மெலிந்த குரலில் பேசினான்

"நான் மட்டும் தப்பி விட்டேன். என் ஃப்ரெண்டும் இன்னொரு பெண்ணும் இன்னும் அந்த மைக்கியிடம் மாட்டியிருக்கிறார்கள்"

"அந்தப் பெண் என்ன டிரெஸ் போட்டிருந்தாள்., கவனித்தாயா?"

"பாண்ட் ஷர்ட்"

"அவளேதான். சசிகலாவேதான். குகையிலிருந்து அந்த இடத்திற்கு எப்படிப் போனீர்கள்?"



அந்தப் பெண்ணின் நலனைப் பற்றித்தான் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. பாஸ்கரைப் பற்றி ஒரு வார்த்தை கேட்க மாட்டேன் என்கிறார்களே! ஜானகிராமனுக்கு வருத்தமாக இருந்தது.

"நாங்கள் என்ன அந்த இடத்திற்கு பிக்னிக்கா போனோம்? பச்சிலை வைத்து எங்களை மயக்கம் செய்து மைக்கி அங்கு கொண்டு போய்விட்டான்"

"குகை வழியே அந்தப் பக்கம் போக ஏதோ பாதையிருக்க வேண்டும். அதைக் கண்டுபிடித்தாக வேண்டும்" இனியராஜ் பரபரப்பானார்.

"அப்படிக் கண்டுபிடிக்க முடியா விட்டாலும், பரவாயில்லை. மலையில் ஏறி இறங்கினால் அந்த தோட்டத்திற்கு போய் விடலாம். எனக்கு வழி தெரியும்" ஜானகிராமன் சொன்னான்.

"மலையேறி இறங்க அதிக நேர ஆகும் பிரதர் சசிகலாவிற்கு ஆபத்து எதுவும் நடப்பதற்குள் நாங்கள் அவளை மீட்டாக வேண்டும்" இனியராஜ் குகைக்குள், பிரகாசமான வெளிச்சத்திற்குள் நுழைந்தார்.

"இடதுபுறம் பிரியும் பாதையிலிருந்து மலையின் அந்தப் பக்கம் போக குறுக்குப் பாதை ஒன்று எங்கேயோ ஒளிந்திருக்கிறது கண்டுபிடியுங்கள்" என்று கான்ஸ்டபிள்களை விரட்டினார்.

பாதுகாப்பிற்கு இடுப்பில் கயிறுகளைக் கட்டிக் கொண்ட கான்ஸ்டெபிள்கள் சக்தி வாய்ந்த டார்ச்சுகளுடன் வெவ்வேறு கிளைப் பாதைகளில் துடிப்போடு நுழைந்தார்கள்.

**மைக்கி** பார்வையை நீட்டிக் கொண்டான். அவனிலிருந்து ஒரு நூறடி இடைவெளி விட்டு முன்னால் பாஸ்கர்

சசிகலா இருவரும் களைப்பாக இருப்பதை மைக்கியால் உணர முடிந்தது பூமியோடு தேய்த்துக் கொண்டு அவர்கள் சரிந்து இறங்குகையில் வேகம் கூடி விட்டதை உணர்ந்தான்.

அவர்களுக்குள் இருந்த இடைவெளியை குறைக்க வேண்டுமென்றால், அவனும் வேகத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். நடந்து இறங்கி முடியும் காரியமில்லை அது. மைக்கி பூமியில் உட்கார்ந்தான். புல் அடர்ந்த பாதையில் தேய்த்துப் புவியீர்ப்பில் நகர ஆரம்பித்தான். இரு கைகளையும் சுதந்திரமாகப் பயன்படுத்த முடியாதபடி கைக்கு ஒரு மூட்டை அவனை இழுத்தது. முக்கியமாய் இரும்பு ஆயுதங்கள் நிரம்பிய மூட்டை. அதைத் தன் கால்களில் பிடித்துக் கொண்டால், அதன் எடையும் தன் வேகத்தைக் கூட்டும் என்று முட்டாள்தனமாக ஒரு முடிவை எடுத்தான்.

அந்த மூட்டையை ஒரு முடிச்சிட்டு, அந்த முடிச்சின் வளையத்தில் தன் வலது காலை நுழைத்தான். பத்தடி தூரம் வேகமாக இறங்கியதும், முடிச்சு சடாரென்று அவிழ்ந்து கொள்ள, மூட்டை அவனிடமிருந்து விடுபட்டு வெகுவேகமாக உருண்டு இறங்க ஆரம்பித்தது. மைக்கி தன்னிச்சையாகப் பதறி எழுந்திருக்க முயல, பாலன்ஸ் இழந்து தடுமாறி விழுந்தான் கட்டுப்பாடில்லாமல் உருண்டு விடக் கூடாது என்ற அச்சத்தோடு கைக்கெட்டிய மரத்தைப் பிடித்து நிதானித்தான்.

பாஸ்கரும், சசிகலாவும் பட்டையாக இருந்த அந்தப் பாறையை நெருங்கும் சமயம் பின்புறம் ஸ் ஸ் என்று ஒரு சப்தம் வர, அவசரமாக திரும்பினார்கள்.

இருட்டில் ஒரு துணி மூட்டை உருண்டு வருவதைப் பார்த்து சசிகலா உச்சகுரலில்



அலறி பாஸ்கரை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள் மூட்டை அவர்களிடமிருந்து இரண்டடி தள்ளி உருண்டு 'ஜலங்ணங்' என்ற ஒலிக் குழப்பத்துடன் பட்டைப் பாறையின் மீது போய் நின்றது.

பாஸ்கர் திருப்பிப் பார்த்தான்.

"மைக்கி" என்றான். சசிகலாவை இழுத்துக் கொண்டு கடைசி பதினைந்தடி வேகமாக இறங்கி பாறையின் கட்டையில் வந்து உட்கார்ந்தான். முதலில் அந்த மூட்டையைத் தூக்கிக் கீழே போட்டான்.

பாறைக்கு கீழே ஆறடி ஆழத்தில் இன்னொரு பாறை இருந்தது. அதில் போய் மூட்டை விழுந்தது.

"குதி" என்றான். சசிகலாவை அணைத்தபடி அந்த ஆறடியைக் குதித்தான். முதலில் அவன் விழுந்து அவன் மீது சசிகலா மெத்தென்று விழுந்தாள்.

எழுந்தார்கள்.

"எங்கேயாவது ஒளிய வேண்டும்" பாஸ்கர் டார்ச்சை நான்குபுறமும் செலுத்த அவர்கள் இருந்த பாறைக்கும், சற்று முன் மேலேயிருந்து குதித்த பாறைக்கும் இடையில் ஒரு இடைவெளி தெரிந்தது. டார்ச்சைப் பயன்படுத்தி பார்த்ததில் அந்த இடைவெளியில் எந்தப் பூச்சி அபாயமும் ஒளிந்திருக்கவில்லை என்று நிச்சயித்தான்.

"இங்கே உட்கார்வோம். மைக்கி குதித்து இறங்கினால் அவனைத் தாக்கத் தயாராயிருப்போம்" பாஸ்கர் டார்ச்சையும், சசிகலாவையும் அந்த இடைவெளியில் அனுப்பிவிட்டு, இரும்பு மூட்டையை இழுத்துக் கொண்டு தானும் நுழைந்தான். உடம்பைக் குறுக்கிக் கொண்டு, தவழ்ந்து நுழைய வேண்டியிருந்தது.

"பாஸ்கர் இங்கே பார். இது வெறும் இடைவெளியில்லை, ஒரு குகை"

"மறுபடியும் குகையா?"

சசிகலா டார்ச்சை உட்புறமாகத் திருப்ப, நீளமான குகைப்பாதை தெரிந்தது. சசிகலாவின் முகத்தில் ஒரு ஆர்வத்துடிப்பு கூடியது.

"இங்கே பார், பாஸ்கர். இங்கேயும் பழைய சிற்பங்கள். பிஜு மகாராஜா இங்கேயும் ஒளிந்து வாழ்ந்திருப்பார் என்று நினைக்கிறேன்"

"ஷ். முதலில் டார்ச்சை அணைத்து விடு. வெளிச்சம் நம்மைக் காட்டிக் கொடுத்து விடும்"

சசிகலா அவசரமாக டார்ச்சை அணைத்துவிட்டு, இருட்டில் பாஸ்கரின் கையைப் பிடித்துக்கொண்டாள்.

பாஸ்கர் அந்த மென்மையான கையை அழுத்திக் கொடுத்தான். நீளமான விரல்களை வருடினான். அவளுடைய கையை எடுத்து தன் மீது வைத்து குனிந்து அந்தக் கையில் முத்தமிட்டான்.

"நோ" என்று சசிகலா கையை உருவிக் கொண்டபோது, மைக்கி மேல் பாறையிலிருந்து குதித்து கால்களைப் பரப்பி நின்றான்.

அவன் கையில் நீளமான சவுக்குக் கட்டை இருந்தது.

## நதிக்கரை ஞாபகம் 9

இன்ஸ்பெக்டர் இனியராஜ் தனக்கு எதிரே நின்று சல்யூட் அடித்த கான்ஸ்டபிள்களை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன மேன்?"

"நீங்கள் சொன்னபடியே ஒரு வழி கிடைத்து விட்டது சார்"

"எங்கே, எங்கே?" இனியராஜும், கூடவே பீட்டரும், அந்தக் கான்ஸ்டபிளின் பின்னே



ஓடினார்கள்.

குகையின் வளைந்து போன பாதையில் நடந்த கான்ஸ்டபிள் ஓரிடத்தில் நின்று சுட்டிக் காட்டினார்.

குகைச் சுவரில் கால்களை அகட்டி நிற்பது போல் ஒரு வீரனின் சிலை. இரு கால்களுக்கும் இடையில் முக்கோணமாய் இருந்த பாறையின் ஜியோமெட்ரிக் எல்லையினூடே மிக மெலிதான கோடு தெரிந்தது. அசைத்ததும் அந்தப் பாறை நகர்ந்து வீரனின் கால்களுக்கு நடுவே வழி பண்ணிக் கொடுத்தது.

"ரொம்ப கவனமாகப் பார்க்காவிட்டால், இது கண்ணுக்கே தெரியாது" என்றார் இன்பராஜ். கான்ஸ்டபிளின் கையைப் பிடித்து குலுக்கினார் "குட் ஜாப்"

அவரும் பீட்டரும், பாறைப் பிளவின் வழியே குனிந்து வெளியேறினர். இனியராஜ் டார்ச் வெளிச்சத்தை பூமி நோக்கிப் பாய்ச்சினார்.

"பார்த்தாயா? புல்தரையில் ஒற்றையடிப் பாதை போல் ஒரு தடம். ஆட்களை இழுத்துப் போனதால் அந்த பாரத்தில் புல் பூமியோடு சேர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது. கமான் ஃபாலோ மீ"

டார்ச் வெளிச்சம் காட்டி அவர் முன்னே நகர, மற்றவர்கள் அந்தப் பாதையில் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

பாதை நேரே அவர்களை அந்த வினோத தோட்டத்திற்குக் கொண்டு விட்டது. பூமியில் சவுக்குக் கம்புகள் நெருக்கமாக நடப்பட்டு வேலி போல் அமைக்கப்பட்டிருந்ததை இனியராஜ் கவனித்தார்.

"இந்தத் தோட்டமாகத்தான் இருக்க வேண்டும்" வெளிச்சமடித்துக் கொண்டே அந்த மரங்களை நெருங்கினார் கீழே

அவிழ்ந்து கிடந்த கொடிப் பின்னல்கள் எலும்புக் கூடுகள், பீட்டரும் ஆர்வமா எல்லாத் திக்கிலும் தேடினான்.

"மை காட்! வேறு இடத்திற்கு ஷிஃப்ட் பண்ணிவிட்டான் போலிருக்கிறது" இனியராஜ் வெறுப்போடு மரத்தை லத்தியால் அடித்தார்.

மைக்கியின் கையிலிருந்த சவுக்குக் கட்டையைப் பார்த்ததும், சசிகலா மறுபடியும் பாஸ்கரிடம் ஒன்றிக் கொண்டாள். பாஸ்கர் மைக்கியைத் தாக்கும் எண்ணத்தோடு எழுந்திருக்க முற்பட "வேண்டாம்" என்று இருட்டில் அவன் காதைக் கண்டு பிடித்து கிசுகிசுத்தாள். "நாம் இங்கே இருப்பது தெரியாமல் அவன் போய் விடுவான். சண்டைக்குப் போகும் அளவு உங்கள் உடம்பில் இந்த நிமிஷம் திராணியில்லை"

ஆயுதம் தூக்க மறுக்கப்பட்ட கையை மெல்ல சசிகலாவின் தோளில் படரவிட்டான். சசிகலா இந்த முறை மறுப்பேதும் சொல்லாமல் அவன் மீது சாய்ந்து கொண்டாள்.

மைக்கி பாறையில் உட்கார்ந்து சரிவை கவனித்தான்.

எங்கும் அவர்களைக் காணோம். ஆயுதங்களடங்கிய அந்தத் துணி மூட்டையும் இல்லை. நிச்சயம் அதைத் தூக்கிக் கொண்டு அவர்கள் வேகமாக இறங்கி சரிவிலிருந்தே விலகியிருக்க முடியாது.

கண்களை இன்னும் பழக்கி, இருட்டை ஆராய்ந்தான்.

இரண்டு பாறைகளுக்கும் இருக்கும் இடைவெளியில் அவர்கள் மறைந்திருக்கக் கூடும். மைக்கி யோசித்தான். இரும்பு



மூட்டை பாஸ்கரிடம் இருக்கும் பட்சத்தில் அதற்கு எதிரே இந்த உருட்டைக் கட்டைக்கு மரியாதையே இருக்காது.

இருட்டிற்குள் தான் நுழைவதும் ஆபத்து. அவர்களை வெளியே கொண்டு வருவதுதான் அவனுக்கு ஆதாயம்.

மைக்கி மூட்டையிலிருந்து கொத்து விஷ இலைகளை எடுத்தான். அந்த பிளவின் வாசலில் கசக்கி வைத்தான்.

தன்னிடமிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து சர்ரக் என்று தீக் கிழித்து அந்த இலைகளைப் பற்ற வைத்தான்.

ஈரம் கசியும் இலைகளாயிருந்த போதிலும் அவை உடனே பற்றிக் கொண்டன. அடர்த்தியான புகையைக் கிளப்பின.

அந்த புகை சுருண்டு சுருண்டு கிளம்பி பாறைகளின் இடைவெளிக்குள் நுழைந்தது. புகையின் வீச்சு தாங்காமல் சசிகலா இருமினாள், பாஸ்கர் இருமினான். கண்களைக் கசக்கிக் கொண்டு அவர்கள் செய்வதறியாது எழுந்தார்கள். மைக்கி உருட்டுக் கட்டையுடன் மறைவாக காத்திருந்தான்.

முற்றிலும் நிமிர முடியாமல் குகையின் ஆரம்ப உயரம் தடுத்தது.

"பாஸ்கர்! எனக்கு மூச்சு திணறுகிறது" சசிகலா பாஸ்கரின் கையைப் பிடித்து இழுத்தாள். வாசலை நோக்கி அவனை இழுக்க முற்பட்டாள்.

"வெயிட், மைக்கி வெளியேதான் இருக்கிறான், நமக்காக பாஸ்கர் புகையினூடே வாய் திறந்து பேசவே கஷ்டப்பட்டான். டார்ச்சை ஆன் செய்து, வெளிச்சத்தை உள்புறம் செலுத்தினான்"

சிற்பங்களடர்ந்த வளைந்த பாறை அவனை வரவேற்றது.

"வா இப்படி ஓடி ஒளிவோம்"

டார்ச்சை அவள் கையில் திணித்து விட்டு இரும்பு மூட்டையைத் தோளில் ஏற்றிக் கொண்டு, அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு பாஸ்கர் அந்த குகைக்குள் குனிந்தபடி ஓடினான்.

வெளியே காத்திருந்த மைக்கி காலடி ஓசைகளைக் கேட்டான். வெளியே ஓடிவராமல் அவர்கள் உட்புறம் பார்த்து ஓடுகிறார்கள் என்றால், இது இன்னொரு குகை வாசலா?

இத்தனை நாட்கள் தனக்கே புலப்படாத இந்த குகையை மைக்கி ஆச்சரியத்தோடு பார்த்த அதே வினாடி, அவன் கண்கள் வெகு தூரத்தில் இருட்டில் நடமாடும் பெரிய வெளிச்சப் புள்ளிகளையும் கவனித்தன.

அவன் ஆசை ஆசையாக உருவாக்கிய தோட்டம். இப்போது அங்கே போலீஸ் வந்திருக்கிறது! மைக்கிக்கு உடனே உறைத்தது. இந்தப் புகையை அவர்கள் பார்த்து விட்டால் ஆபத்து.

மைக்கி மூச்சை அடக்கிக் கொண்டு அந்தப் புகைக்குள் பாய்ந்து, பச்சிலைக் குப்பையை அள்ளி தூர எறிந்தான்.

குகைக்குள் நுழைந்தான்.

இனியராஜ் டார்ச்சை சடாரென்று நிமிர்த்தினார்.

"அங்கே பாருங்கள், புகை"

எல்லோரும் பார்த்தபோது ஒரு புகைப் பந்து உருண்டு உருண்டு சரிவில் இறங்குவது தெரிந்தது.

"கான்ஸ்டபிள்ஸ்... அந்த ஏரியாவை தரோவாக செக் பண்ணுங்கள். பீட்டர், நீ மிஸ்டர் சந்திரபூபதியை வீட்டிற்கு அனுப்பி விடு. நாம் இருந்து அவர்களை எப்படியும் கண்டு பிடிப்போம்"



இனியராஜின் குரலில் உற்சாகம் இருந்தது.

## நதிக்கரை ஞாபகம் 10

பாஸ்கரும், சசிகலாவும், மூச்சிரைக்க ஓடினார்கள். கிடைக்கும் ஒவ்வொரு பாதையிலும், வலது இடது, வலது இடது என்று மாறி மாறித் திரும்பினார்கள்.

ஆச்சர்யகரமாக அதிகம் பழக்கப்படாத போதிலும் குகையின் அந்த பாதைகள் துப்புரவாக இருந்தன. சிலந்திகளோ மற்ற பூச்சிகளோ அதிகம் ஆக்ரமிக்காமல் நாற்றமில்லாமல் இருந்தது. தவிர குகைக்கும் எப்போதுமே ஒருவித சிறைப்பட்ட காற்றைத்தான் சுவாசிக்க முடியும். இந்த குகைப் பாதையிலோ முகத்தில் புதுக்காற்று வந்து வீசிக் கொண்டேயிருந்தது. கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரம் சுழன்று சுழன்று ஓடியபின் குகைச் சுவரைப் பிடித்துக் கொண்டே சசிகலா நின்று விட்டாள். சுவரோடு சரிந்து அப்படியே தரையில் உட்கார்ந்தாள்.

அவளுடைய மூச்சிரைப்பு அந்த குகைச் சுவர்களில் மீண்டும் மீண்டும் எதிரொலித்து குகையே மூச்சிரைப்பது போல் இருந்தது.

"சசி" பாஸ்கர் மெல்ல 'கலா'வை உதிர்த்து விட்டான்.

"எங்கிருந்தோ ஏஸி போல் காற்று வந்து கொண்டேயிருக்கிறது. இந்தப் பாதையில் இன்னும் கொஞ்ச தூரம் போனால் வெளியே போய்விடலாம்"

"என்னால் முடியாது" சசிகலா பாஸ்கரையும் தன்னருகே இழுத்து உட்கார்த்தினாள். "பொழுது விடியும் வரை நாம் இங்கேயே இருப்போமே. வெளியே

போனால்தானே ஆபத்து"

"ஓ.கே" பாஸ்கருக்கு சசிகலாவின் அருகாமையைவிட கவர்ச்சிகரமாக எந்த விஷயமும் தென்படவில்லை. அவளருகே உட்கார்ந்து அவளுடைய தோளில் முகத்தைப் புதைத்தான்.

"உன்னைப் பற்றி நீ சொல்லவே இல்லையே சசி"

"சொல்கிறேனே" சசிகலா அவனுடைய அழுக்குக் கூந்தலை களைந்து கொண்டே பேச ஆரம்பித்தாள்.

"என் அப்பா பெயர் சந்திரபூபதி. நீ கேள்விப்பட்டிருக்கலாம்... பெரிய காண்ட்ராக்டர். மூன்று கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிகளுக்கு அதிபர். கவர்மெண்டுக்கு ரொம்ப வேண்டப்பட்டவர்"

பாஸ்கர் அவள் தோளிலிருந்து முகத்தை எடுத்தான் "ஸாரி" என்றான். "நீ யார் என்பது தெரியாமலேயே..."

"தெரியாமலேயே?"

பாஸ்கர் வார்த்தைகள் கிடைக்காமல் தவித்தான்.

சசிகலா பாஸ்கரின் முகத்தை மறுபடியும் இழுத்துக் கொண்டாள்.

"நான் கோடீஸ்வரனின் பெண் என்றதும் அப்படி நீ விலக வேண்டுமா?"

"பணத்தைக் கண்டால் எனக்கு என்றைக்கும் பயம்"

"ஏன்?"

"அந்தப் பணம் என் வாழ்க்கையில் நிறைய விளையாடி விட்டது. முன்னூறு ரூபாய்க்கு மருந்து வாங்க முடியாததால் அம்மாவை அப்பா சாகவிட்டார். அதே அப்பா எவளோ ஒருத்தி கொடுத்த சுகத்திற்காக கம்பெனி பணத்தில் இரண்டாயிரம் ரூபாயைக் கையாடிவிட்டு ஜெயிலுக்குப் போனார். அங்கிருந்து தப்பிக்க



டிரை பண்ணி அதில் குண்டடிபட்டு ஆளே செத்துப்போனார்"

"கொடுமை!"

"பணம் இல்லாத காரணத்திற்காக நான் அனாதை ஆசிரமங்களில் மாட்டிக் கொண்டேன். எல்லா ஆசிரமங்களும் நல்ல ஆசிரமங்கள் இல்லை. நான் இருந்த இடத்தில் ஆயா ஐநூறுக்கும் ஆயிரத்திற்கும் ரகசியமாகக் குழந்தைகளை வெளியே விற்பவள். நான் பணத்திற்காக விலை போனது ஒரு பொறுக்கியிடம். பத்து வயதிற்குள் திருடவும், செயினை அறுத்துக் கொண்டு ஓடுகிற பஸ்ஸிலிருந்து குதிக்கவும் தான் கற்றுக்கொண்டேன். பிடிக்காத வேலையை செய்யக் கூடாது என்று ஒரு நாள் அவனிடமிருந்து டபாய்த்துக் கொண்டு ஒரு சர்ச்சில் போய் சேர்ந்தேன்.

"பெரிய சினிமாவே எடுக்கலாம் போலிருக்கிறதே உன் கதை"

"செவன்டி எம்.எம்.மில் மூன்று பாகம் எடுக்கலாம் கேள். அந்த சர்ச்சில் இருந்த பாதிரியார். அவர் செலவில் என்னை ஹைஸ்கூலில் சேர்த்தார். காலேஜிற்கு அனுப்பினார். செலவில்லாத படிப்பு. ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறேன். வருஷத்திற்கு ஒரு தடவை சர்ச்சிற்குப் போய் வருவேன்"

"பரவாயில்லை, கதையின் பின்பகுதியில் வசந்தம் இருக்கிறது"

"கிண்டலா? நானும், ஜானகிராமனும் ரொம்ப நாளாக இந்த திரிகோண குகைக்கு வர வேண்டும் என்று ப்ளான் பண்ணிக் கொண்டிருந்தோம். வந்த இடத்தில்"

"வெயிட். ஜானகிராமனா, யார் அது?"

"மைக்கியிடம் இரண்டு பேருமாகச் சேர்ந்துதான் மாட்டினோம். ஆனால் அவன் தப்பித்து விட்டான்"

"உன்னை விட்டு விட்டு? ஸ்கூலில் எப்போதோ படித்த காடிக் கதை எனக்கு ஞாபகம் வருகிறது"

"ச்சே, அவன் பேரில் தப்பே இல்லை. அவன் என்னையும் எப்படியாவது இழுத்துக் கொண்டு போக வேண்டும் என்றுதான் எவ்வளவோ ட்ரை பண்ணினான். எனக்குத்தான் அப்போது உடம்பில் தெம்பே இல்லை"

"நான் என் கதையை கன்டினியூ பண்ணட்டுமா?"

"உன் கதைக்கென்ன? கார், பங்களா, கூப்பிட்ட குரலுக்கு வேலைக்காரர்கள்..."

"இதெல்லாம் இருந்துவிட்டால் போதுமா பாஸ்கர்"

பாஸ்கர் வெடுக்கென்று தலையை நிமிர்த்தினான்.

"நீ சொன்னதெல்லாம் என் வீட்டில் தாராளமாகவே உண்டு. ஆனால் அம்மா இல்லை. சின்ன வயதிலிருந்தே அப்பாவுக்கு என் மேல் ஒரு கண்மூடித்தனமான உயிர். வானத்திலிருந்து ஒரு தேவதை வந்து என்னைக் கொத்திப் போய் விடப் போகிறது என்று பயந்தாரோ என்னவோ என்னைச் சுற்றி எப்போதும் காவல். எனக்கு சுகம் இருந்தது. சுதந்திரம் இல்லை. தனிமைக்காக நிறைய நிறைய ஏங்கினேன். ஆண்களைக் கண்டால் சில பெண்கள் பயந்து வெட்கப்பட்டு விலகுவதைக் கண்டு எனக்கு ஆச்சரியமாக இருக்கும். சின்ன வயதிலிருந்தே ஆண்கள் கண்காணிப்பில் வளர்ந்ததாலோ என்னவோ, ஆண்களிடத்தில் என்னால் ஈஸியாகப் பழக முடிந்தது. மேடம் என்று அழைத்தவ களிடம் சசிகலா என்று கூப்பிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருக்கிறேன்"

"தனிமைக்காகத்தான் திரிகோண



மலைக்கு கிளம்பி வந்தாயா?"

"இல்லை. எனக்கு சின்ன வயசிலிருந்தே பெயிண்டிங்ஸ், சிலைகள், சிற்பங்கள் இதிலெல்லாம் எக்கச்சக்க ஆசை. உலகத்தின் அத்தனை நாடுகளையும் சுற்றிப் பார்த்து விட்டேன். அஃப்கோர்ஸ் காவலுக்கு ஆளுடன்" சசிகலா மலர்ந்து சிரித்தாள்.

## நதிக்கரை ஞாபகம் 11

மைக்கி குகைக்குள் நுழைந்ததும் நிதானித்தான். மேலே எட்டிப் பார்த்தான். இன்ஸ்பெக்டர் வெளிச்சக் கையை ஆட்டி ஆட்டி இந்த திசையில் பேசுவது தெரிந்தது.

குகைப் பாதைக்குள் சற்று தள்ளி உருண்டையாக ஒரு பாறை நின்றிருந்தது. மைக்கிக்காகவே நிறுத்தியிருந்தது போல் அவனுக்கு தோன்றியது. அந்தப் பாறையை மெல்ல மெல்ல உருட்டினான். உருட்டிக் கொண்டு வந்து குகையின் ஆரம்ப இடைவெளியில் நிறுத்தினான். இப்போது குகையில் தவழ்ந்து நுழையக் கூடிய அந்த வாசல் முற்றிலும் மூடப்பட்டு விட்டது.

மைக்கி சற்று மூச்சு வாங்கிக் கொண்டான்.

இருட்டு அவனுக்குப் புதிதில்லை. பச்சிலை மூட்டையைத் தோளில் சுமந்து கொண்டு குகைப் பாதையில் நடக்க ஆரம்பித்தான். காதுகளை உன்னிப்பாக்கிக் கொண்டு பாஸ்கரும், சசிகலாவும் ஓடும் சப்தம் கேட்கிறதா என்று கவனித்தான்.

இல்லை.

எங்கேயும் போய் விட முடியாது. எப்படியும் அவர்களை நான் கண்டு பிடிக்கத்தான் போகிறேன். கண்டு பிடித்து...

மைக்கி வலிக்கும் மூக்கை அழுத்திக்

கொண்டு மேலே நடந்தான்.

போலீஸ் படை அந்த பிரதேசம் முழுவதும் ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் வேட்டையாடிக் கொண்டிருந்தது.

போலீஸ்காரர்கள் களைப்பும், தோல்வியுமாக மலையின் மீது மறுபடி ஏற ஆரம்பித்தபோது, கிழக்குத் திசையில் வானம் கிழிக்கப்பட்டு, ரத்தம் தோய்ந்த சூரியன் எட்டிப் பார்க்க ஆரம்பித்திருந்தது.

பாஸ்கர் தான் முதலில் விழித்துக் கொண்டான்.

சூரியனின் பொன் தோய்த்த கதிர்கள் முதலில் அவன் முகத்தில்தான் உராய்ந்தன.

'எழுந்திருடா மவனே' என்றான.

நேரே சூரிய வெளிச்சம் தொட்டதும் பாஸ்கர் நிமிர்ந்து பார்த்தான்.

அவன் மடியில் சரிந்து தூங்கிக் கொண்டிருந்த சசிகலாவை அதிகம் கலைக்காமல் மெல்லத் தலையை இறக்கி தரையில் படுக்க வைத்தான்.

கோடீஸ்வரன் மகளுக்கு எத்தனை சௌகர்யமான படுக்கை!

வெளிச்சம் குகையின் மேற்புறம் ஒரு திறப்பிலிருந்து கொட்டிக் கொண்டிருந்தது. அதன் வழியே ஆகாயமும், அலைந்து கொண்டிருந்த மேகங்களும் தெரிந்தன.

குகைச் சுவரைப் பார்த்தபோது அது இன்னும் சற்று வளைந்து போனது. அதன் பாதையெங்கும் வெளிச்சம் இருந்தது.

குகையின் பின்புற வாசலை நெருங்கி விட்டோம் என்று பாஸ்கருக்குப் புரிந்தது. சற்றுதூரம் போனால் நிச்சயம் திறந்தவெளி இருக்கும்.

பாஸ்கர் சுவரைப் பிடித்துக் கொண்டு எழுந்தான்.



சுவரில் சிற்பத்தின் மேடு தெரிந்தது.

பிஜு மகாராஜா எந்தக் கல்லையும் விட்டு வைக்கவில்லையா? சிற்பங்கள் பிஜு மகாராஜாவின் பிரியமான காமச் சிற்பங்கள். ஒரு பெண் தனது இரு கால்களையும் ஆணின் தோளில் வைத்து உட்கார்ந்திருக்க

வேண்டாம், பார்க்காதே!

பாஸ்கர் சுவரை ஒட்டி மெதுவாக நடந்தான். அடிவயிற்றில் பசி குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

பாதை முடிவுற்ற இடத்திற்கு அருகே நெருங்கியதும் பாஸ்கர் பிரமித்து நின்று விட்டான்.

குகைக்கு வெளியே இயற்கை தன் அழகையெல்லாம் திரட்டியிருந்தது.

காட்டு ஓடை ஒன்று ஓடிக் கொண்டிருக்க, அந்த நீரின் சலசலப்பில் இன்னொரு சூரியன் பிடிவாதமாக மிதந்தது. ஓடையின் கரையில் மண்ணின் நிறம் நம்ப முடியாத வெண்மை. அந்த வெண்மை ரிப்பனுக்கு வெளியே காடு, மரங்கள், மரங்கள், மரங்கள், மரங்களுக்குப் பின்னே சர்ரென்று ஒரு பெண்ணின் இடுப்பு போல மேலேறும் மலைச்சாரல்.

மற்ற மூன்று புறமும் மலைகள் சூழ்ந்திருந்தன. அந்த இடமே ரகசியமாகப் பொத்தப்பட்டிருந்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஆள் நடமாட்டமே இல்லை.

முந்தின நாள் காற்று சுதந்திரமாக வீசியதன் காரணம் பாஸ்கருக்கு இப்போது புரிந்தது. தண்ணீரில் தோய்த்த காற்று சிலீர் என்று, புத்துணர்ச்சியோடு சதா குகைக்குள் விரட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

பாஸ்கர் குகையின் வாசலிலிருந்து கால்களை மட்டும் நீட்டி மெதுவாக மண் பரப்பில் குதித்தான்.

ஈரமண் உடனே அவனுடைய காலடிகளை அச்சு போட்டது. அவன் நடக்க நடக்க, காலடிகள் பின்னால் தொடர்ந்தன. பாஸ்கர் தன் அழுக்குச் சட்டையைக் கழற்றினான். தண்ணீருக்குள் ஓடினான்.

தண்ணீர் அவனை புரட்டிப் புரட்டி சத்தம் செய்தது.

மலையின் மத்திய உயரத்தில் ஏதோ ஒரு ரகசிய ஊற்றிலிருந்து புறப்பட்டு, அதன் இஷ்டத்திற்கு வழி பண்ணிக்கொண்டு, விதித்த வேகத்தையெல்லாம் மீறி தண்ணீர் எங்கோ ஒரு ஆழத்திற்கு சென்று கொண்டிருந்தது. பட்சிகள் விடாமல் சங்கீதம் பாடின. காற்றில் ஒரு வித சுதந்திரம் இருந்தது. பாஸ்கர் உடம்பில் புத்துணர்ச்சி ஊறியது.

"நீ சுயநலக்காரன்!"

குரல் காற்றில் பறந்து வந்தது.

பாஸ்கர் தண்ணீரிலிருந்து தலையை நிமிர்த்தினான்.

சசிகலா, குகையின் வாசலிலிருந்து அவளும் மண் பரப்பில் குதித்தாள். குதித்து, குதித்து விளையாட்டுத்தனமான வேகத்தோடு, பாஸ்கர் பதித்திருந்த அதே கால் சுவடுகளின் மீது பாதம் பதிய ஓடி வந்தாள். உடைகளைக் கழற்றாமல் தண்ணீருக்குள் பாய்ந்தாள்.

"சசி, ஜாக்கிரதை, தண்ணீரின் வேகம் அதிகம்"

"காலேஜில் நீச்சல் போட்டியில் எத்தனை மெடல்கள் வாங்கியிருக்கிறேன் என்பதை நேற்றைக்கு உனக்கு சொல்ல மறந்து போனேன்" சசிகலா உடம்பை தளர்வாக விட்டு தண்ணீரோடு புரண்டாள்.

"பாஸ்கர், நாம் எங்கே இருக்கிறோம்"

"சொர்க்கத்தில்" என்றான் பாஸ்கர், ஒரு கை தண்ணீரை அள்ளி அவள் மீது எறிந்து.



# நதிக்கரை ஞாபகம் 12

"மூட்டாள்!" சந்திரபூபதி பீட்டரின் முகத்தில் பலம் கொண்ட மட்டும் கையை வீசினார். "எப்படி... எப்படி நீ அவளைத் தனியே அனுப்பலாம்?"

"ஸாரி சார்... வெரி ஸாரி சார்" பீட்டரின் முகம் வெளுத்திருந்தது. கண்களில் தண்ணீர் விழட்டுமா என்று கேட்டது. "போலீஸ் படையே மும்முரமாக இறங்கியிருக்கிறது சார்... எப்படியும் கண்டு பிடித்து விடுவார்கள்"

"கிழித்தார்கள்! நேற்றைக்குக் கோட்டை விட்டு விட்டு நாளைக்குக் கண்டு பிடிக்கப் போகிறார்களாமா? அந்தப் பையன் எங்கே?"

"ஹாஸ்பிடலிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனதும் நேரே நம் வீட்டிற்கு அழைத்து வரக் கார் போயிருக்கிறது, சார்... எந்நேரமும் வந்து விடலாம்"

சந்திரபூபதியின் உதடுகள் ஏதோ சொல்ல அசைந்தன. கோபமாயிருந்தார் என்பது குறைத்துச் சொல்வதாகி விடும். வெடித்து விடும் அபாயத்தில் இருந்தார். தன் பரந்த மூக்கை தேய்த்துக் கொண்டு யோசித்தார்.

"நான் சி.எம்.முடன் பேச வேண்டும். லைன் பிடித்துக் கொடு"

"இதோ சார்..." பீட்டர் அவசரமாக அவரிடமிருந்து நழுவி டெலிபோனுக்கு ஓடினான்.

ஜானகிராமன் காரிலிருந்து இறங்கினான். அந்த மாளிகையின் பிரம்மாண்டத்தை வியந்து கொண்டே படியேறினான். சந்திரபூபதியின் எதிரே காலியாயிருந்த

நாற்காலியில் உட்காரச் சொன்னதும் உட்கார்ந்தான்.

"தாங்க்யூ சார்... உங்கள் செல்வாக்கால் எனக்கு பெஸ்ட் ட்ரீட்மெண்ட் கொடுக்கப் பட்டது"

"உன் ஃப்ரெண்டைப் பற்றிச் சொல்"

"சார்?"

"அந்த பாஸ்கரைப் பற்றிச் சொல். அவன் நல்லவனா, கெட்டவனா, புத்திசாலியா, மக்கா, எட்ஸெட்ரா..."

ஜானகிராமன் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டான்.

"பாஸ்கர் ஒரு அனாதை சார். சர்ச்சில் வளர்ந்தவன். அவன் அப்பா திருடி விட்டு ஜெயிலுக்குப் போனவர். பாஸ்கரும் சின்ன வயதில் போலீஸிடம் அடிக்கடி உதை வாங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறான். பொதுவாக அவனுக்கு பணக்காரர்களைக் கண்டாலே ஒரு வெறுப்பு"

சந்திரபூபதி திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"பணக்காரர்களைத் திட்டுவானா?"

"நிறைய... ஒரு பணக்காரனின் குடும் என் கையில் சிக்க வேண்டும். பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கி விடுவேன் என்று என்னிடம் பலமுறை சொல்லியிருக் கிறான்"

"மை காட்! அப்படிப்பட்டவனிடமா சசிகலா மாட்டியிருக்கிறாள்?" சந்திரபூபதி தன் கையைத் தானே குத்திக் கொண்டார்.

"சொல்ல முடியவில்லையே. சார், அவர்கள் உயிரோடுதான் இருக்கிறார்களா? மைக்கிஅவர்கள்..." சந்திரபூபதி நாற் காலியை விட்டு எப்பொழுது எழுந்தார், எப்போது ஜானகிராமனை நெருங்கினார் என்பது தெரிவதற்கு முன்னாலேயே ஜானகிராமனின் சட்டையைப் பிடித்து அவனைக் கொத்தாகத் தூக்கியிருந்தார்.



சுவரில் வீசினார்.

"ராஸ்கல், சசிகலா இஸ் ஸ்டில் அலைவ். அவள் உயிரோடு இருக்கிறாளா என்ற சந்தேகத்தை என்னிடமே சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம்!"

ஜானகிராமன் சுவரிலிருந்து மெல்ல தேய்த்துக்கொண்டு நிமிர்ந்தான். முட்டாள், ஒரு கோடீஸ்வரனின் மூடைக் கெடுத்து விட்டாயே.

"நிச்சயம் உயிரோடுதான் சார் இருக்கிறாள். அவர்கள் மைக்கியிடமிருந்து தப்பி விட்டார்களா, இல்லை என்றுதான்"

"மைக்கியானாலும் சரி, ஜாக்கியானாலும் சரி. என் மகளை போலீஸ் கண்டு பிடித்தேயாக வேண்டும். சி.எம்.மிடமிருந்து நேரடியாக போலீஸிற்கு உத்தரவுகள் போய்விட்டன. என் மகளைக் கண்டு பிடிக்கும் போலீஸ்காரனுக்கு நான் எவ்வளவு தரப் போகிறேன் தெரியுமா? ஒன் லாக்... ஒரு லட்சம்! என் மகளைப் பற்றி டிபார்ட்மெண்ட்டில் இல்லாத வெளியாள் தகவல் கொடுத்தால் பரிசு இரண்டு லட்சம்.. பீட்டர்... பேப்பரில் விளம்பரம் கொடுக்கச் சொன்னேனே"

"கொடுத்தாயிற்று சார்"

"எனக்கு சசிகலா வேண்டும். உடனே... உடனே! போங்கள், எல்லோரும் தேடுங்கள்!" சந்திரபூபதி திடீரென்று முகத்தைப் பொத்திக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறினார்.

மைக்கி நிமிர்ந்து பார்த்தான்.

மேலேயிருந்து பொத்தல்கள் வழியே வெளிச்சம் வழிந்து கொண்டிருந்தது.

விடிந்து விட்டது! மைக்கி சுறுசுறுப்பாக எழுந்தான். இரவு முழுவதும் குகை பாதையில் நடந்து நடந்து களைத்து

விட்டான். குகைக்கு வெளியே போவது எப்படி என்பதே புரியவில்லை. சுழல் காற்றில் சிக்கிக் கொண்ட காகிதம் போல குகைக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகிறான் என்பது மட்டும் அவனுக்கு விளங்கியது. அவனுக்கு தெரிந்த வழிகளையெல்லாம் சோதித்துப் பார்த்து விட்டான். இடது புறப் பாதைகளில் மட்டும் திரும்பு, அதற்கும் ஊஹூம்.

மைக்கிக்கு முதல் முறையாக மெலிதான பயம் வந்தது. இந்த குகைச் சூழலிலிருந்து வெளியேறவே முடியாதோ?

பசித்தது.

மைக்கிக்குப் பசியைப் பற்றி கவலை இல்லை. மூட்டையைப் பிரித்தான். ஒரு பச்சிலையை எடுத்து வாய்க்குள் அடக்கிக் கொண்டான்.

தான் இருந்த இடத்தில் குகைச் சுவரில் பச்சிலையைத் தேய்த்து ஒரு அடையாளம் செய்து விட்டு அடுத்த பாதையில் நுழைந்தான்.

## நதிக்கரை ஞாபகம் 13

பாஸ்கர் மரத்திலிருந்து இரண்டு கால்களையும் பொருத்திப் பொருத்தி இறங்கினான்.

அவன் கையில் தேங்காய்கள்.

ஏற்கனவே கீழே மணல் பரப்பில் கொய்யாக்களும், மாம்பழங்களும் சேர்ந்திருந்தன.

கையிலிருந்த காய்களைக் கீழேபோட்டு விட்டு "வரலாமா?" என்று குரல் கொடுத்தான்.

"நோ" என்று பெரிய மாமரத்தின் பின்னாலிருந்து சசிகலாவின் குரல் வந்தது. "இன்னும் சட்டை காயவில்லை...



எல்லாவற்றையும் க்ளோஸ் செய்து முடித்த பிறகு நீ வந்தால் நான் பொறுப்பில்லை"

பாஸ்கர் கீழேயிருந்த மாம்பழத்தை எடுத்து சட்டையணியாத மார்பில் தேய்த்துக் கொண்டு கடித்தான்.

'க்வீல்' என்று அலறல் வந்தது மரத்துக்குப் பின்னாலிருந்து.

அலறலைத் தொடர்ந்து சசிகலா சட்டையை அப்படியே மார்பில் போர்த்தியபடி ஓடி வந்தாள். பாஸ்கரின் மீது மோதி நின்றாள். அவள் உடல் புயலில் காட்டிய கூந்தல் போல் நடுங்கியது.

"என்ன சசி, என்ன ஆயிற்று?"

"ஈ ஈ ஈ ஈ" என்று பதில் வந்தது சசிகலா மறைந்திருந்த மரத்தின் பின்னேயிருந்து.

குரங்கு!

சாம்பல் நிற உடம்போடு மீட்டர் கணக்கில் வாலோடு, வாய் வட்டம் மட்டும் சிகப்பாக இருந்த குரங்கு.

ஒன்று, இரண்டு, மூன்று, ..... ஐந்து... பத்து... இருபது...

ராமாயணப் படை போல் குரங்குகள் கூடிக்கொண்டே போயின. அம்மாவின் மார்பை கட்டிக் கொண்டிருந்த குட்டிக் குரங்கு கூட தலை கீழாகப் பார்த்து 'ஈஈஈ' என்று மிரட்டலாக இளித்தது.

பாஸ்கர் சசிகலாவை அணைத்தபடி பின்னால் நகர்ந்தான். தான் கடித்துக் கொண்டிருந்த மாம்பழத்தை தூர எறிந்தான்.

முதல் குரங்கு நாட்டியமாக நடந்து வந்து கீழேயிருந்த பழங்களில் ஒன்றைப் பொறுக்கிக் கொள்ள, அடுத்தது, அதற்கடுத்தது என்று தாவி வந்து பழங்களை அள்ளிக் கொள்ள ஆரம்பித்தன.

பாஸ்கர் சசிகலாவை நகர்த்திக் கொண்டே தண்ணீரை அடைந்து அதில்

இறங்கினான்.

குரங்குகள் இப்போது அவர்களை விட்டு விட்டு எதிர்ப்பாதையில் எறும்புச் சாரி போல ஓடின. ஓடி மலையின் பிடிமானத்தில் கப் கப் என்று மேலே ஏறின.

"குறைந்தது நூறு குரங்காவது இருக்கும்" பாஸ்கர் சசிகலாவின் முதுகை அழுத்திப் பிடித்துக் கொண்டு சொன்னான். "குரங்குகள் இப்படித்தான் ஒரு கூட்டமாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகரும். நடுவில் நாம் ஏதாவது தடுத்து வம்பு பண்ணியிருந்தால்... ஏய், சட்டை போடாமல் வெளியே வர மாட்டேன் என்றாய்?"

சசிகலா அவனிடமிருந்து அவசரமாக விடுபட்டு அவன் மார்பில் படபடவென்று குத்தினாள்.

"உனக்கு நன்றாக நீச்சல் தெரியுமா சசி?"

"ஏன் கேட்கிறாய்?"

"இந்தத் தண்ணீரின் போக்கில் நாம் கவனமாக நீந்திக் கொண்டு போனால் நிச்சயம் மலையடிவாரத்தை அடைந்து விடலாம். அங்கே யாராவது கிடைப்பார்கள்"

சசிகலா ஏக்கமான முகத்தை நிமிர்த்தினாள்.

"போயே ஆகவேண்டுமா பாஸ்கர்?"

"வாட் யூ மீன்?"

"எனக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக் கிறது. சுற்றிலும் இயற்கை, நதிக்கரை, நதியில் திரும்பத் திரும்பக் குளிப்பதே ஒரு ஜாலி"

"இது நதியில்லை. காட்டாறு"

"எனக்கு நதிக்கரைதான்! பங்களா ரூம்களையும், பெரிய பெரிய கட்டிடங்களையும் பார்த்துப் பார்த்து சலித்து விட்டேன். பாஸ்கர் எனக்கு இந்த



சூழ்நிலை சந்தோஷமாக இருக்கிறது. சுதந்திரமாக இருக்கிறது. என் முதுகுக்குப் பின்னால் நின்று நோட்டமிட யாரும் இல்லை"

"குரங்குகளைத் தவிர"

"நீ கூடத்தான் குரங்கைப் பார்த்ததும் பயந்தாய்"

"பயம். நாம் சேர்த்து வைத்த பழத்தையெல்லாம் குரங்கு அள்ளிக் கொண்டு போகிறதே என்ற பயம்"

"பழங்களுக்கா குறைச்சல்? மறுபடியும் மரமேறினால் மறுபடியும் பழம்"

"சசி, நீ நிஜமாகவே சொல்கிறாயா? நாம் இங்கேயே எத்தனை நாள் இருக்க முடியும்?"

"எத்தனை நாள் முடியுமோ, அத்தனை நாள், நம்மை அவர்கள் கண்டு பிடிக்கும் வரை!"

"உனக்குப் பயமாக இல்லையா?"

"நீ இருக்கும் போது சந்தோஷமாகத்தான் இருக்கிறது. நான் இதுவரை அனுபவித்திராத சந்தோஷம்" சசிகலா பாஸ்கரை வளைத்து இழுத்து அவன் முகத்திற்கு தன் முகத்தைக் கொண்டு போனபோது, சூரியன் உச்சியிலிருந்து மேற்கு நோக்கி இறங்க ஆரம்பித்து விட்டது.

## நதிக்கரை ஞாபகம் 14

இன்ஸ்பெக்டர் இனியராஜ் விறைப்பாக நின்றிருந்தார்.

நின்றிருந்த இடம் போலீஸ் கமிஷனரின் அலுவலகம்.

"அந்தப் பெண் தொலைந்து போய் முப்பத்தாறு மணி நேரம் ஆகிவிட்டது. மேன். என்னதான் கண்டு பிடித்திருக் கிறாய்?" கமிஷனரின் குரல் கரகரத்து

வந்தது. மேலேயிருந்து பிரிட்டிஸ் காலத்து மின்விசிறி பெரிய பெரிய கைகளைச் சுழற்றி காற்றை ர்ர்ர் என்ற சப்தத்துடன் விசிறிக் கொண்டிருந்தது.

"மைக்கி என்பவன் ஒரு பெரிய தோட்டத்தை உருவாக்கியிருக்கிறான் சார். அந்த இடத்திலிருந்து மூன்று வழிதான் இருக்கிறது. ஒன்று மலை மேலே ஏறி இந்தப் பக்கம் இறங்கினால் குகை வாசல். இரண்டாவதாக மலைச் சரிவில் இடதுபுறமாக இறங்கினால் மரங்கள் வழியே ஆட்டமாடிக்காக கீழேயிருக்கும் கிராமத்திற்குள்தான் வந்தாக வேண்டும். அங்கேயும் சந்தேகமில்லாமல் விசாரித்தாயிற்று. அவர்கள் அந்தப் பக்கம் வரவில்லை"

"மூன்றாவது வழி?"

"கிராமத்திற்கு இறங்குவதற்கு பதிலாக வலது புறம் இறங்கினால் நேரே காட்டுக்குள் கொண்டு விடும். ஆனால் காட்டைச் சுற்றிலும் ஆளுயரத்திற்கு கெட்டியான முள்வேலி போடப்பட்டிருக்கிறது. ஆடு மாடுகள் நுழைந்து விடாமலிருக்க.. தவிர காட்டிலாகா அதிகாரிகளையும் விசாரித்து விட்டேன்.

"காட்டுக்குள்யேயும் போகவில்லை?"

"இல்லை சார்"

"பின்னே எங்கே மேன்? காற்றில் கலந்து விட்டார்களா?"

"ஒரே ஒரு அபாயம் இருக்கிறது சார்"

"என்ன?"

"மலையேறியபின், இறங்கத் தெரியாமல் சறுக்கிவிட்டால் செங்குத்தாகக் கீழே விழுந்து"

"சொல்லாதே மேன். அந்தப் பணக்காரனுக்கு ஹார்ட்டே வெடித்துவிடும். அந்த பள்ளத்தில் எதற்கும் ஆராய்ந்து பார். கம்வித் ரிசல்ட்ஸ்" கமிஷனர், குரலில் சற்றே



கோபத்தைச் சேர்த்து இன்ஸ்பெக்டரை போகலாம் என்று சைகை செய்தார்.

## நதிக்கரை ஞாபகம் 15

அஸ்தமனத்திற்காகவே காத்திருந்தது போல் இருட்டு வேகமாக அந்த பிரதேசத்தைச் சாப்பிட ஆரம்பித்தது.

குகைக்குள் பாஸ்கர் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

சசிகலா அவன் மடியில் படுத்திருந்தாள். பாஸ்கர் மாதுளையை சுவரில் மோதி உடைத்தான். முத்துக்களை ஒவ்வொன்றாக சசிகலாவின் திறந்த உதடுகளுக்குள் போட்டான்.

முந்தின நாளை விட நிலா வெளிச்சம் குறைந்திருந்தது. காற்றில் குளிர் கூடியிருந்தது. சசிகலா ஜீன்ஸ் பாண்டை கணுக்காலுக்கு சற்று மேலே சுருட்டி விட்டிருந்தாள்.

பாஸ்கர் ஒற்றை விரலை நீட்டி சசிகலாவின் நெற்றியைத் தொட்டான். வகிடு இருந்து பழக்கமான இடத்திலிருந்து விரலை ஓட்டி அவளுக்கு கூரான மூக்குத் தண்டில் மெல்ல ஓட்டினான். மூக்கின் நுனி வந்ததும், இறக்கி அவள் உதடுகளைத் தொட்டு...

சசிகலா அந்த விரலை சரேலென வாய்க்குள் வாங்கிக் கொண்டு பற்களால் கவ்விக் கொண்டாள். பாஸ்கரின் மடியில் புரண்டு அவனுடைய வலிமையான மார்பில் கையை அலையவிட்டாள்.

"சசி" பாஸ்கரின் குரல் அடிப்படை ஒலியுடன் ரகசியமாக வந்தது. "இது இரண்டாவது இரவு, சசி. நேற்றைக்கு இருந்ததைப் போல் எனக்கு இன்றைக்கும் கட்டுப்பாடு இருக்குமா தெரியவில்லை?"

"எதற்குக் கட்டுப்பாடு?"

"நாம் ஒருவருக்கொருவர் உணர்ச்சிகளைத் தூண்டிக் கொண்டிருக்கிறோம்... நாம் கண்ட்ரோல் மீறி விடுவோமோ என்று பயம் வந்துவிட்டது"

"கண்ட்ரோலா? எதற்கு பாஸ்கர், கண்ட்ரோல்? நாம் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்றுதான் நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். கண்ட்ரோல்கள் இல்லாத, கண்காணிப்பு இல்லாத இந்த வாழ்க்கையை நான் பரிபூரணமாக அனுபவிக்கப் போகிறேன்"

"இன்னும் எத்தனை நாளைக்கு சசி?"

"சொன்னேனே, எத்தனை நாள் முடியுமோ அத்தனை நாள்" சசிகலாவின் குரலில் கொஞ்சல் இருந்தது. கெஞ்சல் இருந்தது.

பாஸ்கர் அவன் உதடுகளைத் தேடிக் குனிந்தான்.

ஜானகிராமன் கூலிங் கிளாஸ் அணிந்திருந்தான்.

வெயில் கடுமையாகத் துவங்கியிருந்த வேளையில் மலையின் அந்தப் பாதையில் மெல்ல மெல்ல இறங்கினான். கண்கள் கூர்மையாக இரண்டு திக்குகளையும் பார்த்துக் கொண்டே வந்தன.

மைக்கியும், பாஸ்கரும், சசிகலாவும் கிராமத்துப் பக்கம் வரவில்லையென்றால், நிச்சயம் இந்தப் பக்கத்தில்தான் இறங்கியிருக்க வேண்டும். எங்கேயோ காணாமல் போயிருக்கிறார்கள். எங்கே, எங்கே?

போலீஸின் பார்வையிலிருந்து தப்பிவிட்ட அந்த 'ஏதோ' தன் கண்களில் சிக்கி விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும். சசிகலாவைக் கண்டு பிடித்துக்



கொடுத்தால் இரண்டு லட்சம்!

ஜானகிராமன் இருகைகளையும் நுழைத்து முதுகில் பையைச் சுமந்தவாறு இறங்கினான்.

பாறையருகே வந்ததும் நின்றான். சூரிய வெளிச்சத்தில் புதருக்குள் ஏதுவோ மின்னியது. நெருங்கி, புதரை விலக்கி ஆராய்ந்தான்.

செடிகளை வெட்டும் கத்திரி.. இது எப்படி இங்கே வந்தது? மைக்கியின் மூட்டை உருண்டு வந்தபோது, அதிலிருந்து அந்த கத்திரி நழுவி விவரம் தெரியாத போதிலும் தோட்டக்கத்திரியைப் பார்த்ததும் இங்கே எங்கோதான் மைக்கி ஒளிந்திருக்க வேண்டும் என்று அவன் மூளைக்குள் வெளிச்சம் அடித்தது.

எங்கே?

பாறையைக் கவனமாகப் பார்த்தான். இரு பாறைகளுக்கும் இடையில் இருந்த பகுதியில் சின்னதாக வேறு நிறத்தில் அதிகம் வெயில் காணாத ஒரு உருட்டுப் பாறை இருப்பதை கவனித்தான். அந்தப் பாறையை பலம் அனுமதித்த வரைக்கும் அசைத்தான் திடீரென்று அந்தப் பாறை அவன் பிடியிலிருந்து நழுவி குகைக்குள்ளே உருண்டு நகர, ஒரு ஆள் தவழ்ந்து நுழையக் கூடிய பாதையை ஜானகிராமன் கண்டு பிடித்தான்.

பாதையின் ஆரம்பத்தில் தரையோடு சில பச்சிலைகள் தேய்த்து நசுங்கியிருப்பதைப் பார்த்ததும், அவன் உள்ளம் ஸ்ப்ரிங்கில் வைத்தது போல் துள்ளியது. முதுகிலிருந்து பையை இறக்கினான்.

முதலில் பையை நுழைத்து விட்டு, பின்னாலேயே அவனும் தவழ்ந்து நுழைந்தான். பையைத் திறந்து கைக்கு அடக்கமான ரிவால்வரை எடுத்துத் தயாராக

வைத்துக் கொண்டான். டார்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சினான்.

குகையின் சுவரெங்கும் சிற்பங்கள் இருப்பதை ஆச்சரியமாக கவனித்தான். பாதை தவறி விடக்கூடாது என்று முடிவு செய்தான்.

பையில் எல்லா முன்னேற்பாடுகளும் இருக்க, வெகு நீளமான கயிற்றை எடுத்தான். ஒரு முனையை அந்த உருட்டுப் பாறையோடு சேர்த்து கட்டினான். இன்னொரு முனையைக் கையில் பிடித்துக் கொண்டு கயிற்றுச் சுருளை அவிழ்த்துக் கொண்டே முதல் வலத்தில் திரும்பினான்.

**மைக்கி** நின்றான்.

பாதையைத் தேர்ந்து, மாற்றி சோர்ந்து இரண்டு நாட்களாக குகையில் சுற்றி வந்ததற்கு பரிசு கிடைத்து விட்டது!

அவன் இப்போது நின்றிருந்த இடத்தில் குரல்கள் கேட்டன. பாஸ்கரின், சசிகலாவின் குரல்கள்.

சுவரோடு ஒன்றிக் கொண்டு, நெற்றி, கண்கள் மட்டும் தெரியும்படி எட்டிப் பார்த்தான்.

குகையின் பின்வாசல் தெரிந்தது. அதன் வழியே பச்சை மரங்களும், மஞ்சள் இலைகளும் வெள்ளை மண்ணும், வர்ணமில்லாத தெளிந்த நீரோட்டமும் தெரிந்தன. மாலை வெயில் மங்கியிருந்தது.

சசிகலா அதே ஜீன்ஸ், அதே சட்டையில் இருந்தாள். அவளுடைய மூக்கைப் பிடித்து ஆட்டியபடி எதிரே பாஸ்கர், இருவரும் குகையின் விளிம்பில் உட்கார்ந்து கால்களை வெளியே தொங்க விட்டிருந்தார்கள்.

மைக்கி யோசித்தான். வெளியே அஸ்தமனத்திற்கு தயாராய் வானம் கறுப்பு



சால்வையை இழுத்துக் கொள்ள ஆரம்பித்திருந்தது.

இப்போது அவசரம் வேண்டாம். இவர்கள் தூங்கட்டும். தூங்கிய பின் அவர்களை நெருங்குவதும், பச்சிலையைப் பயன்படுத்துவதும் சுலபம்.

மைக்கி காத்திருக்க முடிவு செய்தான்.

சுவரோடு சரிந்து உட்கார்ந்து கொண்டான்.

## நதிக்கரை ஞாபகம் 16

"**மைக்கியை** நாம் பைத்தியக்காரன் என்கிறோமே. கிட்டத்தட்ட நாமும் அதைப் போல் ஆகிவிடவில்லை?" பாஸ்கர் சசிகலாவின் விரல்களை சொடக்கு இழுத்துக் கொண்டே கேட்டான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" சசிகலா மென்மையாகக் கேட்டாள்.

"ஏனா? அவனும் இயற்கை, பச்சிலை என்று வெளியுலகத்தை நிராகரித்து விட்டான். இன்னும் கொஞ்ச நாளில் நாமும் போட்டுக் கொள்ள புது டிரஸ் இல்லாமல் இலையும், தழையும்தான் கட்டிக் கொள்ளப் போகிறோம். இலைகளும் கிடைக்காத போது..."

"ச்சீய்..."

"ஆனால் நாக்குதான் செத்து விட்டது. திரும்பத் திரும்ப எத்தனை நாளைக்கு பழங்களையே சாப்பிட்டுக் கொண்டிருப்பது? ஒரு சாம்பார் உண்டா, மிளகு ரசம் உண்டா, வாழைக்காய் சிப்ஸ் உண்டா?"

"இந்த வாழ்க்கை போரடித்து விட்டதா பாஸ்கர்?"

"உன்னைத் தவிர மற்றதெல்லாம் போரடித்து விடுமோ என்று பயப்படுகிறேன் சசி. உனக்கு ஜாலியாய் இருக்கிறதாக்கும்"

"மகா ஜாலியாய்"

"சப்போஸ் நம்மைக் கண்டு பிடித்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள். அதோடு என்னை மறந்து விடுவாயா சசி?"

"அல்பன். சரியான அல்பன் நீ... நகரு"

"ஏய்"

"பின்னே எப்படி, இத்தனை அல்பத்தனமான எண்ணமெல்லாம் உனக்கு வருகிறது?" சசிகலாவின் குரலில் கோபம் வந்து விட்டது.

"ஸாரிடா... அதற்காக இப்படியா புர்ர் என்று மூக்கைத் தூக்கிக் கொள்வது?" பாஸ்கர் சசிகலாவை அருகில் இழுத்தான். "சாரி, உன் இஷ்டப்படியே டார்ஜான் போல கடைசி வரை இருப்போம். யாராவது கண்டு பிடிக்க வந்தாலும், நாம் ஒளிந்து விடுவோம், ஒகே?"

"சேர்ந்து இருக்கும் வரை சந்தோஷமாக இருப்போமே பாஸ்கர். ஏன் மூடைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்?" சசிகலா அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவர்கள் ஓய்வதற்காக மைக்கி காத்திருந்தான்.

இரவு தன் இமைகளை இழுத்து மூடிக் கொண்டு விட்டது.

பாஸ்கரும், சசிகலாவும் ஒருவரோடு ஒருவர் கை கோர்த்துக் கொண்டு கனவுகளில் இருந்தார்கள்.

மைக்கி மெல்ல தன் இடத்திலிருந்து எழுந்தான். ஒலி எழுப்பாமல் நடந்தான். பச்சிலைகளை ஒரு கையில் எடுத்துக் கொண்டு உருட்டுக் கட்டையை அடுத்த கையில் பிடித்தபடி அவர்களை நெருங்கி முகத்துக்கு நேரே குனிந்தான்.

உள்ளுணர்வு சசிகலாவை எச்சரித்திருக்க வேண்டும். சடாரென்று கண்களை



விழித்ததும் தலைக்கு மேலே தெரிந்த மைக்கியின் முகத்தைப் பார்த்ததும், அமானுஷ்யமான அலறல் ஒன்று அவன் தொண்டையிலிருந்து வெளிப்பட்டது.

பாஸ்கர் திடுக்கிட்டு விழித்தான். உடன் செயல்பட்டான். சசிகலாவைத் தன் முதுகுக்குப் பின்னே தள்ளி விட்டு கப்பென்று எழுந்தான்.

மைக்கி விகாரமாகச் சிரித்தான். உருட்டுக் கட்டையை தலைக்கு மேல் உயர்த்தி வேகமாக கீழே இறக்கினான்.

பாஸ்கர் துள்ளி நகர்ந்தான். வீச்சு சிற்பத்தின் தோளில் இறங்கி விரயமானது. மைக்கி மறுபடியும் தன் கட்டையை உயர்த்தி இறக்க, பாஸ்கர் மறுபடியும் ஒதுங்கினான். இப்போது குகைச் சுவரின் மீது தேய்த்துக் கொண்டு அவன் நிற்க, இனி ஒரு அங்குலம் கூட அவனால் பின்வாங்க முடியாது என்ற சந்தோஷத்தோடு மைக்கி கால்களை அகட்டி வாகாக நின்று கொண்டு முழு வீச்சோடு...

திடீரென்று அந்தப் பிரதேசத்தில் வெளிச்சம் பாய்ந்தது.

'டிஷ்யூங்' என்ற ஒற்றை ஒலி மறுபடி மறுபடி சுவர்களில் மோதித் திரும்பி எதிரொலித்தது. மைக்கி அப்படியே தள்ளாடி பின்னால் சரிந்து குகைச் சுவரில் மோதிப் பரப்பிக் கொண்டு விழுந்தான்.

பாஸ்கரும், சசிகலாவும் வெளிச்சம் வந்த திசையைப் பார்த்தார்கள்.

"ஜானி!" பாஸ்கர் சந்தோஷமாகக் கூவினான்.

ஜானகிராமன் ஒரு கையில் டார்ச்சும், மற்றதில் உயர்த்திய துப்பாக்கியுமாக நின்றிருந்தான்.

## நதிக்கரை ஞாபகம் 17

அவர்கள் மூன்று பேரும் அந்த சிறு நெருப்பைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்திருந்தார்கள். சற்று தள்ளி, மைக்கி தோளில் கட்டுப் போடப்பட்டு மூச்சிரைத்துக் கொண்டிருந்தான்.

"ஸோ, நீங்கள் இரண்டு பேரும் சந்தோஷமாக இருக்கிறீர்கள்?"

"இது ஒரு புதுமையான அனுபவம், ஜானி"

"தெரிகிறது. தெரிகிறது" ஜானகிராமன் சசிகலாவை ஓரக்கண்ணால் பார்த்து சிரித்தான். "அங்க என்னடாவென்றால் சசிகலாவின் அப்பா, மகளைக் காணோம் என்று பேப்பர் பேப்பராக விளம்பரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்"

"நான்கு நாள் இப்படியே ஓடி விட்டது ஜானி... இன்னும் ஒரு மூன்று நாள் இருந்து விட்டு நாங்களே திரும்பி விடப் போகிறோம்"

"அதுவரை?"

"அதுவரை இந்த விஷயத்தை வெளியே சொல்லி விடாதே ஜானி"

"என்ன ஜாய்! என்னால் எந்த தொந்தரவும் இருக்காது. விடிந்ததும் மைக்கியை இழுத்துக் கொண்டு நான் கிளம்புகிறேன்"

"தாங்க்யூ, தாங்க்யூ ஸோமச்"

விடியல் வானம் பறவைகளைத் தட்டி எழுப்பியபோது ஜானகிராமனும் எழுந்து விட்டான். மைக்கியின் கைகளையும், கால்களையும் கயிற்றில் கட்டினான்.

"கிளம்பட்டுமா? த்ரீ டேஸ். மூன்று நாளுக்கு அப்புறம் உங்களை ரிஜிஸ்ட்ரார்



ஆபீஸில் சந்திக்கலாமா?"

"போடா, கலாட்டா பண்ணாதே" பாஸ்கர் ஜானகிராமனின் முதுகைப் பிடித்து செல்லமாகத் தள்ளினான்.

ஜானகிராமன் குகைப் பாதையில் மைக்கியை இழுத்துக் கொண்டு நடக்கையில், சசிகலாவை வைத்து எப்படிப் பணம் பண்ணுவது என்று தீர்மானித்து விட்டான்.

"யெஸ் சந்திரபூபதி ஸ்பீக்கிங்" என்றார் சந்திரபூபதி. போனைக் காதோடு ஒட்டிக் கொண்டு.

"உங்கள் பக்கத்தில் யாரும் இல்லையே?"

"இல்லை."

"இந்த போனை யாரும் ஒட்டுக் கேட்கவில்லையே?"

"இல்லை. ஏன்?"

"நாம் பேசப் போவது முக்கியமான விஷயம். உங்கள் சசிகலாவைப் பற்றியது"

சந்திரபூபதி விரல் முட்டிகள் வெளுக்க, ரிசீவரை இறுக்கிக் கொண்டார் "சொல்"

"உங்கள் மகள் இருக்கும் இடத்தை நான் சொல்லுமுன், நமக்குள் சின்ன ஒப்பந்தம்"

"என்ன?"

"நீங்கள் அறிவித்திருக்கும் இரண்டு லட்சம் போதாது. ஐந்து லட்சம் வேண்டும்"

"யார் பேசுவது?"

"என் பெயர் பாஸ்கர். உங்கள் மகள் என்னிடம்தான் இருக்கிறாள்"

"சொல். எங்கே அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும்?"

"ஒரு வி.ஐ.பி.சூட்கேஸில் போட்டுப் பூட்டி என் ஃப்ரெண்ட் ஜானகிராமனிடம் கொடுங்கள். பெட்டியில் என்ன இருக்கிறது

என்பதை அவனிடம் சொல்ல வேண்டாம். பெட்டியின் சாவியை திரிகோண மலையின் குகைக்குள் நுழைந்ததும் இடதுபுறம் இருக்கும் மூன்றாவது குதிரை வீரன் சிற்பத்தின் காலடியில் வைத்து விடுங்கள். நாளைக் காலை பத்து மணிக்குள் பணமும், சாவியும் நான் சொன்னபடி சேர்ப்பிக்கப் பட்டிருக்க வேண்டும்"

"சசிகலா எப்போது எனக்கு திரும்பக் கிடைப்பாள்?"

"நாளை மாலை, பணத்தை நான் சரி பார்த்தவுடன் போலீஸோ வேறு யாரோ குறுக்கிட்டால் யாருக்கு ஆபத்து என்று உங்களுக்கே தெரியும்"

தொடர்பு அறுந்தது...

சந்திரபூபதி யோசித்தார். ஐந்து லட்சம் என்பது பெரிய தொகை இல்லை. போலீஸிடம் சொல்வது நல்லதா, இல்லையா?

வேண்டாம். பணத்திற்கு ஆசைப்படுபவன். பணம் கிடைத்ததும் நிச்சயம் சசிகலாவைத் திருப்பித் தந்து விடுவான்...

பணத்தை ஏற்பாடு செய்ய தன் ரகசிய அலமாரி வைத்த அறையை நோக்கிப் போனார் சந்திரபூபதி.

ஜானகிராமன் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

"இந்தப் பெட்டியில் என்ன சார் இருக்கிறது?" என்றான் சந்திரபூபதியைப் பார்த்து.

"உனக்குத் தெரியாது?" சந்திரபூபதி அவனைக் குழப்பமாகப் பார்த்தார்.

"தெரியாது சார். பாஸ்கரிடமிருந்து எனக்கு போன் வந்தது"

"அவனும் உங்கள் மகளும் எங்கோ



பத்திரமாக இருப்பதாகச் சொன்னான். நீங்கள் ஒரு பெட்டி கொடுப்பீர்கள். அதைக் கொண்டு வந்து திரிகோணமலைக் குகையில் வைத்துவிட வேண்டும் என்று சொன்னான்"

"அப்படியானால் அவன் சொன்னபடியே செய். இந்தா. இந்த சாவியை குதிரைவீரன் சிற்பத்தின் காலடியில் வைத்து விடு"

"ஓகே சார். போலீஸில் சொல்லி விட்டால் என்ன சார்?"

"நோ, நான் சொன்னதை மட்டும் செய்"

ஜானகிராமன் பெட்டியை எடுத்துக் கொண்டு ஆட்டோவில் ஏறினான். முதலில் அவனுடைய பாங்கிற்குப் போய் மூன்று லட்சத்தை லாக்கரில் வைத்தான்.

"சேரன் ட்ரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டாண்ட் போப்பா"

அங்கே பெட்டியை க்ளோக் ரூமில் வைத்து விட்டு ரசீது வாங்கிக் கொண்டான். மறக்காமல் ரசீதை பாஸ்கர் பெயரில் வாங்கிக் கொண்டான்.

சுதந்திரமாக விசில் அடித்துக் கொண்டு தன் அடுத்த நடவடிக்கை பற்றி முடிவெடுத்தான்.

## நதிக்கரை ஞாபகம் 18

பாஸ்கர் தண்ணீரின் சுழலில் காலை விட்டான்.

சர்ர் என்று தயிர் கடைவது போல் கடைந்து அந்த காலில் விறுவிறுப்பு ஏறியது. சிலிர்த்தான். சிரித்தான்.

"இங்கே வா" என்று சசிகலாவைக் கூப்பிட்டான்.

சசிகலா பாறையின் மீது நின்ற அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

கூந்தலைக் கொண்டையாக முடிந்து, அந்த உயரத்திலிருந்து தண்ணீருக்குள் கத்தி போல் குதித்தாள். குதித்த வேகத்தில் தண்ணீருக்குள் பாய்ந்த மீன் போல் கிழித்துக் கொண்டு அவள் வெளியே வந்த இடத்திற்கு நேர் மேலே பாஸ்கர் நின்றிருந்தான்.

ஒரு கையை தண்ணீருக்கு வெளியே நீட்டினாள். பாஸ்கர் அந்த கையைப் பற்றிக் கொள்ள, தண்ணீரின் வேகத்தில் அவள் பாலே போல் சுழல சந்தோஷமும், சிரிப்புமாக கூவினாள்.

பாஸ்கர் அந்தக் கையைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே உயர்த்தி சசிகலாவை நெஞ்சருகே கொண்டு வந்து அப்படியே அணைத்துக் கொண்டான். இப்போது இருவருமாக சேர்ந்து தண்ணீருக்குள் பாய்ந்தார்கள்.

"இன்னும் மூன்றே நாள்!" என்று ஏக்கமாய் கத்தினாள் சசிகலா.

மரங்களிலிருந்து பட்சிகளும், பூச்சிகளும் கூட அவளோடு அந்த ஏக்கத்தில் கலந்து கொண்டன.

சந்திரபூபதி அறையின் நீள அகலத்தை நடந்து நடந்து அளந்தார். கைகளை குவித்து முதுகின் பின்புறம் கட்டிக் கொண்டார். பார்வை கடிகாரத்தையும், டெலிபோனையும் மாறி மாறித் தொட்டுக் கொண்டிருந்தது.

ஜானகிராமன் அவருடைய டென்ஷனை கவனித்தான். முகத்தை கவலையாக வைத்துக் கொண்டு "சார்" என்று கூப்பிட்டான்.

"என்ன?"

"சொல்லலாமா வேண்டாமா என்று என் மண்டையைப் போட்டு உடைத்துக்



கொண்டிருந்தேன். என் ஃப்ரெண்டை நானே காட்டிக் கொடுப்பதா என்று யோசித்து யோசித்து என் மண்டையே வெடித்து விடும் போலாகிவிட்டது"

சந்திரபூபதி நடையில் உறைந்தார். துள்ளலுடன் திரும்பினார்.

"வாட் டு யூ மீன்?"

"பாஸ்கர், சசிகலாவை மயக்கி வைத்திருக்கும் இடத்தை நான் கண்டு பிடித்து விட்டேன் சார். போலீஸை அனுப்பி நீங்கள் அவர்களைப் பிடித்து விடலாம். ஆனால் அந்தப் பணம் கொடுத்தது தெரிந்தால் போலீஸிடம் உங்களையே கோபிப்பார்கள் சார்"

"பணம் போகிறது தம்பி. சில்லறைக் காசு. இரண்டு நாள் உட்கார்ந்தால் சம்பாதித்து விடுவேன். சசிகலா எங்கே?"

"நான் கூட வர இஷ்டப்படவில்லை சார். என்னைப் பார்த்தால் பாஸ்கர் கோபப்படுவான். அப்புறம் மைக்கி என்பவனைக் கூட தோளில் சுட்டு நான் பிடித்திருக்கிறேன். போலீஸ் என்னை..."

"போலீசை நான் கவனித்துக் கொள்கிறேன். என் மகள் மட்டும் உயிரோடு எனக்கு கிடைக்கட்டும். உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன்"

"இன்னொரு விஷயத்தையும், நான் சொல்லியாக வேண்டும் சார். சசிகலாவை பாஸ்கர் நன்றாக மயக்கி விட்டான். காதல் மயக்கம் அவளை வைத்து அவன் பணம் வாங்கிய விவரமெல்லாம் அவளுக்குத் தெரியாது. சொன்னால் நம்பவும் மாட்டாள்"

"இதோ பார். நீ வீணாக பேசிக் கொண்டிருக்கிறாய். எல்லாவற்றையும் நான் சமாளித்துக் கொள்வேன். ஒரு பதில் மட்டும் கிடைத்தால் போதும். சசிகலா எங்கே?"

# நதிக்கரை ஞாபகம் 19

பாஸ்கர் மரத்தை ஒட்டி நின்றிருந்தான். சசிகலா அவனுடைய இரு தோள்களிலும் இரு கால்களை வைத்து நின்றிருந்தாள். அவளுடைய பாலன்ஸ் தவறி விடாமலிருக்க, பாஸ்கர் அவளுடைய இடுப்பைப் பிடித்துக் கொள்ள, சசிகலா நுனி விரல்களால் எம்பினாள். எம்பி மரத்தில் உச்சியிலிருந்த மஞ்சள் பூவைக் கிள்ளி எடுத்தாள்.

அந்தப் பூ வினோதமாக இருந்தது. உள்ளங்கை அகலத்திற்கு மஞ்சள் இதழ். அதன் இருபுறமும் பேப்பர் போல் சுருண்டிருக்க, நடுவில் இன்னொரு சின்ன மஞ்சள் இதழ். அதற்கும் மத்தியில் பின்குஷன் போன்ற மினி அமைப்பில் மகரந்தப் பொட்டுகள்.

பூவிலிருந்து வந்த வாசனைதான், சசிகலாவை கிறங்கடித்தது. ஒரு பூவோடு விட்டதா ஆசை?

"பாஸ்கர் இன்னும் கொஞ்சம் லிஃப்ட் பண்ணு கண்ணா, இன்னொரு பூவும் வேண்டும்."

"அது சரி, இரண்டு தோளும் எனக்கு இல்லை கழண்டு போகிறது?"

பாஸ்கர் தோள்களை இன்னும் உயர்த்தியபோது தான் அந்த சத்தத்தைக் கேட்டான்.

கடக், கடக், கடக், கடக்.

ஷூக்களின் ஒலி, நிறைய ஷூக்களின் ஒலி.

திடுக்கிடலோடு திரும்பினான்.

குகை வாசலில் இன்ஸ்பெக்டர் இனியராஜ் நீட்டிய ரிவால்வரோடு நின்றிருக்க, அவருக்குப் பின்னே வரிசையாக



கான்ஸ்டபிள்கள்.

பாஸ்கர் புரியாத குழப்பத்தோடு சசிகலாவை அழுத்த, சசிகலா அவன் கைகளில் ஆதரவாக சரிந்து அவன் உடம்போடு உரசிக் கொண்டு இறங்கினாள். இறங்கியவுடன் பாஸ்கரின் முதுகுக்குப் பின்னே ஒளிந்து கொண்டு தோளுக்கு மேலே எட்டிப் பார்த்தாள்.

"யூ ஆர் அண்டர் அரெஸ்ட்" என்றார் இன்ஃபெக்டர் இனியராஜ், குரலை உயர்த்தி.

"ஆனால், இன்ஸ்பெக்டர், நான்"

"ஐ செட் யூ ஆர் அண்டர் அரெஸ்ட்!"

கான்ஸ்டபிள்கள் அந்த இருவரையும் சூழ்ந்து கொண்டனர்.

# நதிக்கரை ஞாபகம் 20

"நோ, நோ, நோ!" டெலிபோனும், பேப்பர் வெயிட்டும், குலுங்கி அதிர, சசிகலா ஆத்திரத்துடன் மேஜையில் குத்தினாள். "நான் சொல்வதை நீங்கள் நம்ப மாட்டீர்கள் டாடி? பாஸ்கர் என்னைக் கடத்திப் போகவில்லை"

சந்திரபூபதி அவள் கையை மெல்லப் பற்றினார்.

"டார்லிங், நான் விசாரிக்காமல் எதையும் செய்ய மாட்டேன். அந்த பாஸ்கர் என்னிடமிருந்து பணம் வாங்கியதற்கு அதில் கொஞ்சம் பணத்தை பஸ் ஸ்டாண்ட் க்ளோக் ரூமில் விட்டு வைத்ததற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது சசிம்மா?"

"அந்த ஜானகிராமனை நம்பாதீர்கள் டாடி. அவன் எங்களை ஏமாற்றி விட்டான். மைக்கியிடமிருந்து என்னைக் காப்பாற்றியதே பாஸ்கர்தான். நான்தான் அந்த இடத்திலேயே இருக்கலாம் என்று

பாஸ்கரிடம் அடம் பிடித்தேன். பாஸ்கர் நல்லவன். தங்கமானவன். அவன் எனக்கு வேண்டும்"

சந்திரபூபதி சசிகலாவை நிமிர்ந்து பார்த்தார். இவளை இந்த நிமிடத்தில் சமாதானம் செய்ய முடியாது என்று தோன்றியது. ஒரு நல்ல டாக்டராகப் பார்த்து இவள் நினைவிலிருந்து பாஸ்கரை அழித்தாக வேண்டும். திருடனுக்கு பிறந்த பயல்! ராஸ்கல், இவளை எப்படி மாற்றி விட்டான்!

"டியர், நான் வேண்டுமானால் தப்பு செய்வேன். ஜட்ஜே என்ன சென்னார்? சாட்சிகளை தீர விசாரித்துவிட்டுத் தானே ஒரு வருஷம் ஜெயில் என்று தீர்ப்பு வாசித்தார்?"

"சாட்சிகள்! யார் சாட்சிகள்? உங்கள் பணத்திற்கு பல்லிளித்துக் கொண்டு போலீஸ் சொல்லிக் கொடுத்ததைத் திரும்பிச் சொன்னார்களே, அவர்களா? அவர்களிடம் நாய்போல் வால் ஆட்டி நின்றானே ஜானி, அவனா?"

கமான் சசி, நீ பாஸ்கரை ஒரு கெட்ட சொப்பனமாக நினைத்து மற ஜட்ஜ்மெண்டிற்குப் பிறகு நான் என்ன செய்ய முடியும்?"

சசிகலா சரேலென்று முகத்தை நிமிர்த்தினாள்.

"கெட்ட சொப்பனம் என்றா சொன்னீர்கள்? அந்த ஐந்து நாள்தான் என் வாழ்க்கையிலேயே பெஸ்ட் டயம். கோல்டன் பீரியட். உங்களுக்கு உடனே இன்ஃபர்மேஷன் கொடுக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவனுக்கு தண்டனை"

சசிகலா மேஜையிலிருந்து கண்ணாடி பேப்பர் வெயிட்டை எடுத்துச் சுழற்றினாள். மேஜை மீது பொட்டென்று வைத்தாள்.



"ஜட்ஜிற்கு மட்டும்தான் தீர்ப்பு எழுதத் தெரியுமா? எனக்கும் எழுதத் தெரியும் டாடி"

பட்டென்று திரும்பி அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

முற்றும் போடுமுன்....

சசிகலா கண்ணாடிக்கு எதிரே உட்கார்ந்திருந்தாள்.

அவள் அணிந்திருந்த ஜீன்ஸ் பாண்ட் அழுக்காகியிருந்தது. சட்டை நைந்திருந்தது. ஒரு பொத்தன் இல்லை. துவைத்து பல காலமானது போல் இருந்தது.

கண்ணாடியில் பார்த்து "பாஸ்கர் ஐ லவ் யூ" என்றாள். லிப்ஸ்டிக்கை எடுத்து BASKAR என்று பெரிது பெரிதாக எழுதினாள்.

கதவு திறக்கப்பட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

சந்திரபூபதி நின்றிருந்தார். அவருக்கு பின்னே வெள்ளை கோட் அணிந்த டாக்டர்.

"பாஸ்கர், புதிதாக இன்னொரு டாக்டர் வந்திருக்கிறார். டெய்லி என்னை செக் பண்ணிப் பார்ப்பதில் அப்பாவுக்கு ஒரு குஷி என்று கண்ணாடிக்கு முத்தம் கொடுத்தாள்"

"இப்படித்தான் டாக்டர், இந்த ரூமை விட்டு வெளியே வரவே மாட்டேன் என்கிறாள். சாப்பாடு, டிபன் எல்லாம் கதவு வழியே இல்லை என்றால் ஜன்னல் வழியேதான். இந்த டிரெஸ்ஸைக் கழற்றவே மாட்டேன் என்று அடம் பிடிக்கிறாள்"

"நான் சசிகலாவுடன் கொஞ்சம் தனியாகப் பேசலாமா?" என்று கேட்டார் டாக்டர்.

"நிச்சயமாக" சந்திரபூபதி அவர்களை தனியே விட்டு அறைக்கு வெளியே போனார்.

முப்பது நிமிடங்கள் சென்ற பின் டாக்டர் வெளியே வந்தார். சந்திரபூபதியை

அழைத்தார்.

"நான் எல்லா விதத்திலும் பேசிப் பார்த்து விட்டேன். சசிகலா இந்த பத்தொன்பது வருட வாழ்க்கையில் மிக சந்தோஷமாக இருந்தது அந்த ஐந்து நாட்கள்தான்.

அந்த சந்தோஷத்திற்கு ஒரே காரணம், பாருங்கள், எந்த தப்பும் செய்யாத பாஸ்கர் ஜெயிலில் இருக்கும்போது, நான் மட்டும் எப்படி சுதந்திரமாக இருப்பது என்று கேட்கிறாள். அவர்கள் அந்த நதிக்கரையில் சேர்ந்து இருந்தது தப்பு என்றால் அவளுக்கும் தண்டனையைக் கொடுத்திருக்க வேண்டுமாம். அவளாகவே அவளுக்கு தண்டனை விதித்துக் கொண்டிருக்கிறாள். நீங்கள் ஒன்று செய்யலாம், உங்கள் வக்கீலைப் கூப்பிட்டு கன்ஸல்ட் பண்ணுங்கள். இந்த ஸ்டேஜில் கேஸை வாபஸ் வாங்கி, பாஸ்கரை வெளியே கொண்டு வர முடியுமா பாருங்கள். பாஸ்கர் வெளியே வரும் நாளில் தான் சசிகலாவும் வெளியே வருவாள்"

சந்திரபூபதி திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பாஸ்கர்" சசிகலா கண்ணாடியில் கிசுகிசுப்பான குரலில் பேசிக் கொண்டிருந்தாள். "எனக்கு அந்த மஞ்சள் பூ வேண்டும். பறித்துத் தருவாயா?"

முற்றும்